REGD 4642 M

சந்தா விபரம்
—
ஆண்டு ரூ 7.
„ 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 19 2 50 | இதழ் 34

## அந்தரங்க விஷயம்!

**கேள்வி:**

இரண்டாயிர ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் அதிகாரிகளை சம்பந்தப்பட்ட மந்திரிகள்தான் நியமிக்கிறார்களா அல்லது மந்திரி சபையின் ஆலோசனைக்குப்பின் நியமிக்கப்படுகிறார்களா?

**பதில்:**

இதெல்லாம் சர்க்கார் சம்பந்தமான அந்தரங்க விஷயங்கள். இது பற்றிய விபரங்களை நான் அறிவிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை!

தேஷ்முக்: ரொம்ப சரி! அதனால்தான் நம்முடைய நிதி நிலைமை இவ்வளவு கேடுபாடாக, மோசமாக, போய்க்கொண்டிருக்கிறது போலும்!

இந்திய சட்டசபை காட்சி

புதுடெல்லி பிப் 8.

புயல் எழும்புகிறது!

தகராறு உருவாகிறது!

'போட்டி' பலமாகிறது!

வேதனை! வேதனை!!

உலக அரங்கம்

# ★ இந்தோ—சீனு ★

வாணன்

ரஷ்ய—அமெரிக்கப் போட்டிப் போரின், வெட்டுக் காயமாக நிற்கிறது, ஆசியாவைச் சேர்ந்த இந்தோ சீனு! பிரெஞ்சுப் பிடியில் சிக்கிச் சிதறிக்கும் இந்தோசீனுவை—விடுதலை வீரன் ஹோசிமின் காப்பாற்ற நிற்கிருன், தனது மக்களுடன்!

ஆசியாவின் பெரிய நாடான சீனு—சிவப்பாகிவிட்டது. இந்தோ சீனுவும், 'சிவப்பு' நிறம் அடைந்து விடுமோ, என்ற அச்சத்தால் முதலாளித்துவ நாடுகள்—அமெரிக்கா, பிரிட்டன்—இந்தோசீன விடுதலைக் கிளர்ச்சியை, நசுக்க 'சூழ்ச்சிவலை' பின்னுகின்றன. விளைவு, ஒரு மன்னனைக் கொண்டே அரசாங்கம் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது!

ஹோ—சி—மின் தலைமையில் ஒரு அரசாங்கம்; மன்னன் பாவோடாய் தலைமையில் சிருஷ்டிக்கப்பட்ட இன்னொரு சர்க்கார்!

ஹோ-சி-மின் சர்க்காரை ரஷ்யாவும் சில நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. 'அது சரியல்ல' என்று உறுமிக்கொண்டு, பாவோடாய் சர்க்காரை, அமெரிக்கா-பிரிட்டன்-பிரான்ஸ் அங்கீகரித்துள்ளது. ஒரே நாடு; ஆனால் இரண்டு சர்க்கார்கள்!

ரஷ்ய-அமெரிக்க தகராறு வளர்கிறது. வேதனையான காட்சி! விபரத்தைக் காட்டுகிறது இக்கட்டுரை.

"பிரஞ்சு அரசாங்கம் முன்னாள் மன்னன் பாவோடாயிடம் இந்தோ சீனுவை ஒப்படைத்ததுதான் நியாயம் என்று எண்ணுவதுடன், பாவோடாய் மன்னன் இந்தோசீனுக் கம்யூனிஸ்ட்டுகளை ஒழித்து நாட்டில் நிலையான அரசாங்கத்தை நிறுவும் நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது அமெரிக்க அரசாங்கம்!"

29—1—50.

"டாக்டர் ஹோ. சி. மின்னுடைய அரசாங்கத்திற்கே பெருவாரியான மக்களின் ஆதரவு இருப்பதாகச் சோவியத் யூனியன் நம்புகிற காரணத்தால் வியட் நாம் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை அங்கீகரிப்பதுடன், அத்துடன் அரசாங்க ரீதியில் தூதுவர்களை மாற்றிக்கொள்ளவும் சோவியத்யூனியன் தீர்மானிக்கிறது."

"தன்காலனி நாட்டில்தான் உண்டாக்கியபாவோடாய் அரசாங்கத்தை எதிர்த்து நாசவேலைகள் புரியும் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை அங்கிகாரம் செய்தது தவறு என்று பிரான்ஸ்ரஷ்யாவுக்குஅறிவிக்கிறது'

1—2—50.

"இந்தோசைனுவின் சுதந்திரத்திற்கு முதல் எதிரியான டாக்டர் ஹோவின் அரசாங்கத்தை அங்கீகாரம செய்வதின்மூலம் ரஷ்ய அரசாங்கம் இந்தோசீனுவில் தன்கையாட்களை அமர்த்திக்கொண்டு தூரக் கிழக்கு ஆசியாவில் ஆதிக்கம்செலுத்தப்பார்க்கிறது. இதை அமெரிக்க அரசாங்கம பலமாகக் கண்டிப்பதுடன் கூடியசிக்கிரத்தில் உண்மையை அறிந்து உலகநாடுகள் பாவோடாய் அரசாஙகத்தை அங்கீகாரம் செய்யும் என்று நம்புகிறது."

2—2—50.

"தான் அனுப்பிய கண்டனக்காகிதத்தையும் திருப்பி அனுப்பிவிட்டு வியட் நாம் அரசாங்கத்தை ஆதரிக்க ரஷ்யா முனைந்துவிட்ட காரணத்தால் பிரான்ஸ் தன்னுடைய மாஸ்கோ தூதுவரை திரும்பவும் அழைக்க யோசனை செய்துவருகிறது."

3—2—50.

"பாவோடாய் அரசாங்கத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் அங்கிகாரம்செய்கிறது."

7—2—50.

சென்ற இரண்டு வாரத்திற்கு[illegible] உலக அரங்கில் ஏற்பட்டுள்ள மா[illegible]தல்களை மேற்கண்ட பத்திரிகைச்[illegible]திகள் நன்றாகக்காண்பிக்கும். இந்த[illegible] கட்டுரை உங்கள் கைக்கு வருவத[illegible]குள்ளேயே இன்னும் பலமாறுத[illegible]கள் ஏற்பட்டுவிடலாம்.

ஒரேநாட்டில் இரண்டு அரசா[illegible]கங்கள்! ஒரு அரசாங்கம் விடுத[illegible] உணர்ச்சியின் உருவம். மற்ற[illegible] பிரஞ்சு அரசாங்கத்தின் சிருஷ்[illegible] இரண்டிற்கும் இடையறாத போ[illegible] ஒரு அரசாங்கத்திற்கு 'அன்ன[illegible]காவடி' பரம்பரையினன் தலைவ[illegible] மற்றொன்றிற்கு மாநிலம் ஆண்ட[illegible]னன் தலைவன்.

இந்தநிலையில் ரஷ்யா ஒருஅரசா[illegible]கத்தை அங்கீகரித்துவிட்ட[illegible] அமெரிக்கா, பிரிட்டன் இரண்[illegible] வேறு ஒரு அரசாங்கத்தை அங்கீ[illegible]ரம் செய்துவிட்டன. இப்பொழு[illegible]யார் அங்கீகாரம் செய்த அரசாங்[illegible] வியட் நாமை ஆள்வது.?

சர்வதேசிய ரீதியில் இந்த அ[illegible]காரப்பிரச்னை பயங்கர உரு[illegible] தோன்றியுள்ளது. இதுவரை ம[illegible]முகமாக நடந்துவந்த போரா[illegible]

ள் இன்று வெளிப் படையாகத் தாற்றமளிக்கின்றன. ரஷ்யாவும் மெரிக்காவும் எதிருக்கெதிரான நிலையில் நிற்கின்றன. அரசியல் அரங்கம் தெரிந்தோர் இதன் முடிவைப்பற்றிக் கவலை நிறைந்த முகத்தோடு வர்ணிக்கின்றனர். உலகசமாதானம் மனித சமுதாயத்தைவிட்டு இன்னும் பலகோடி மைல்கள் அப்பால் ஓடிவிட்டது!

* * *

ஆசியாவின் தென்கிழக்குக்கோடியிலுள்ள இந்தோசீனாவுக்கு வியட்நாம் என்பது புதியபெயர். வியட் ன்ற சைனாவின் மாகாணத்திற்குத் தெற்குப்பாகத்திலுள்ள காரணத்தால், வியட் - நாம் (நாம்—தெற்கு) ன்ற பெயர் இந்தோசீனாவிற்கு த்துவிட்டது. இந்திய உபகண்டத்தைப்போலவியட் நாமும் புராதனப் பெருமையையும், சரித்திரசிறப்பும் ய்ந்தது. இந்தியாவைப்போலப் பதினெட்டாவது நூற்றாண்டினிறுதியில் ஐரோப்பிய வல்லரசுகளின் கண்பார்வையில் விழுந்தவர்கள் வியட்நாமியர்கள். அதன் பலனாக பத்தொன்பதாவது நூற்றாண்டினிறுதியில் இந்தோசீனா பூராவும் பிரஞ்சு அரசாங்கத்தின வசமாயிற்று. அதன்பிறகு தங்களை ஆளும் ஐரோப்பிய சீமான்களுக்காகவே வியட் நாமி உழைத்தார்கள். அவர்களுடைய செல்வம் பிரஞ்சுப் பிரபுக்களுக்கு காணிக்கையாக்கப்பட்டது. அவர்களுடைய இரத்தம் வெள்ளை முதலாளிகளுக்காகச் சிந்தப்பட்டது. பிரஞ்சுக்காரர்கள் சுரண்டல் வேலையைத் தங்குத்தடையின்றிச் செய்து வந்தனர்.

சரித்திர முறைப்படி அங்கும் சியப் போராட்டம் ஆரம்பமாகியது. 1920-லிருந்து விடுதலை வேட்கை வேகமாகப்பரவ ஆரம்பித்தது. பிரஞ்சுக்காரர்களின் றாக்கி முனைகள் தீவிரமாக வேலை செய்தன. கட்டுப்பாடான முறையில் போராட்டங்கள் நடைபெறுததால், ஆரம்பகாலங்களில் விடுதலைப் போராட்டங்கள் நசுக்கப்பட்டன. னாலும் நாளடைவில் உரிமை வேட்கை நாடெங்கணும் பரவியது. 1935-ம் ஆண்டின் ஆரம்பத்தில்ஸ்தாபன ரீதியான தேசிய இயக்கங்கள் ளர்ந்து வந்தன. அவைகளை ஒழிக்க முதல்படியாக மக்களின் தலைவர்களை எல்லோரையும் தேசப்பிரஷ்டம்செய்தது. பிரஞ்சு அரசாங்கம்! ஆனால் என்ன செய்தபோதிலும் உரிமை வேட்கையைத் தடுக்க ஆளும் வர்க்கத்தால் முடியுமா? மக்கள் போராட்டம் தலைவர்கள் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் இன்னும் தீவிரமாக வலுத்தது. பிரஞ்சு வல்லரசு மக்களை அடக்குவதில் துருப்புகளை உபயோகப்படுத்தியது. போராட்டங்கள் யாவும் அடக்கப்பட்டன. பிரஞ்சு தன்பிடியை இன்னும் அதிகமாக இறுக்கி, வியட் நாம் முதலாளிகளின் துணையுடன் நாடெங்கும் பாதுகாப்புச் சைன்யங்களை வைத்துக்கொண்டது. அப்பொழுது வியட் நாமில் ஏழ்மையும் அறியாமையும்தான் மக்களின் சொத்து. அவர்கள் வாழ்க்கையில் இன்பம் தேவை என்றுகூட உணரமுடியாதபடி துன்பத்தில் ஆழ்ந்திருந்தனர். இரண்டரைக்கோடி மக்கள் வாழும் வியட் நாமில் நூற்றுக்குப்பதினைந்து பேரேபடித்திருந்தனர், வியட்நாமின் முக்கிய விளைபொருள்கள் அரிசியும் ரப்பரும்தான். 1937-ம் ஆண்டு இறுதியில வியட் நாமின் அரிசிஉற்பத்தி இரண்டரை லட்சம் மெட்ரிக்டன்களைத்தாண்டியது. ஆனால்உற்பத்தியாக்கப்பட்ட உணவு நாட்டுமக்களுக்கு பரிமாறப்படவில்லை. பிரான்சுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது! இந்தச்சுரண்டல் வேலைக்கு உதவி செய்ய இந்தோசீனாவில் "இந்தோசீனாபாங்க்" என்ற நாணய செலாவணி ஸ்தாபனம் பிரஞ்சுக்காரர்களால் நிர்மாணிக்கப்பட்டது. அரிசி வியாபாரத்தில் மாத்திரம் இந்தோசீனா பாங்கின் வருடலாபம் சுமார் நூற்றுப்பத்துக்கோடி பிராங்குகளாகும். தென்கிழக்கு ஆசியாவில் உற்பத்தியாகும் ரப்பரில் பெரியதொரு பாகம் இந்தோசீனாவிலேயே உற்பத்தியாகிறதாம். இதைத்தவிர நிலக்கரி, ஈயம், துத்தநாகம் முதலிய உலோகப் பொருள்களும் கிடைக்கின்றன. இந்தோசீன காடுகளில் கிடைக்கும் மர எண்ணெய்கள் லவங்கம், இஞ்சி முதலிய இயற்கைவிளைச்சல்கள் ஏராளம்.

இவ்வளவு செல்வங்கள் இருந்தபோதிலும், விளைந்த பொருளைத் தன் நாட்டிற்குக் கொண்டுபோனதைத் தவிர, பிரஞ்சு அரசாங்கம் வியட் நாமிற்கு எந்தவித உதவியும் செய்யவில்லை. இந்த நிலையில்தான் கடந்த உலகப்போர் உண்டானது.

உலகப்போர் வியட் நாமின் சரித்திரத்தையே மாற்றிவிட்டது. உறங்கிக்கிடந்த வியட் நாமியரைத் தட்டியெழுப்பியது. இலாபம் வந்தவரை சுரண்டிக்கொண்டிருந்த பிரஞ்சு ஏகாதிபத்தியம் ஐரோப்பிய போரரங்கத்தில் தோல்வியுற்று ஹிட்லரின் கையில் சிக்கியது. மக்களோ, அறியாமையிலும் வறுமையிலும் உழல்கின்றனர். பிரான்ஸ் வீழ்ந்ததினால், வியட் நாமை ஆண்டுவந்த பிரஞ்சுக்காரர்கள் தங்களிஷ்டம்போல் மக்களைத் துன்புறுத்த ஆரம்பித்தார்கள். உள்நாட்டிலே முதலாளிகளின் அட்டகாசம் வேறு! இதோடு ஜப்பானியரின் ஆக்கிரமிப்பும் ஆரம்பமானது. ஜப்பானியர்களை எதிர்த்து போரிடப் பிரஞ்சு அரசாங்கம் சக்தியற்றுக்கிடந்தது, முன்னமேயே வலிவிழந்து பராரியாக்கப்பட்ட மக்கள் இன்னும் தேசிய உணர்ச்சியை மாத்திரம் இழந்துவிடவில்லை. தங்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றக் கொரில்லாப் படையை அமைத்துக் கடும்போரிட்டனர். தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட வியட் நாம் தலைவர்கள் சண்டைச் சமயத்தில திரும்பவும் நாடு திரும்பினர். அவர்கள் தலைமையில் ஜப்பானிய எதிர்ப்புப் போர் நடைபெற்றது.

உலக யுத்தம் முடிவடைந்தது. ஐரோப்பிய வல்லரசுகள் எல்லோருக்கும் ஏற்பட்ட கதிக்கு ஆளான பிரான்ஸ் மட்டும் வியட்நாமின் சுதந்திரக் கோரிக்கையை வலிவிழந்து எப்படிச் சமாளிக்கும்?

ஐந்தாண்டுகள், எதிரியுடன் போரிட்டு நாட்டிற்காசப்பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் பலிகொடுக்கப்பட்ட பின்னர் ஆகஸ்டு 1945-ல் வியட் நாம் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. 'அடிமைப்பட்டுக்கிடந்தோர் அரசு அமைத்துக்கொள்வதா' என்று பிரஞ்சு அரசாங்கம் சீறியது—கோபக்கனலைக் கக்கியது! ஆனால், முகிழ்த்த புதிய குடியரசு தன்வேலையைக் கவனிக்கத் தொடங்கியது. அதற்குத் தலைவர் டாக்டர் ஹோ. சி. மின். டாக்டர் ஹோ பிரான்ஸ் நாட்டிலேயே சென்று வியட் நாமின் சுதந்திரத்திற்காகபாடுபட்டவர். மாஸ்கோவில் சென்று கம்யூனிசப்பயிற்சி பெற்றவர். சீன

விடுதலை வீரர், சன்யாட்சென்னிடம் "புரட்சிக்கீதம்" கற்றுக்கொண்டவர் பழுத்த அரசியல் தந்திரக்காரர். அவருடைய தலைமையில்தான் வியட்நாம் குடியரசு ஆரம்பமாகியது.

புதிய குடியரசுக்கு இருந்த வேலை அளவிடமுடியாதது. ஜப்பானியரால் அழிக்கப்பட்ட பாலங்கள், எரிக்கப்பட்ட வீடுகள், பாலைவனமாக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள், முதலியவையெல்லாம் புதுப்பிக்கவேண்டியிருந்தது. விவசாயத்திற்கு வேண்டிய அணைக்கட்டுகள் பல கட்டவேண்டியிருந்தன. இதோடு கடல்போல நெற்பயிர்கள் பரந்துகிடக்கும் வியட்நாமிலேயே, ஜப்பானியரின் ஆதிக்கத்தால் பஞ்சம் ஏற்பட்டது. சுமார் இருபது லட்சம் வியட்நாமியர் இறந்தனர். இவ்வளவு இடுக்கண்கள் நிறைந்த நேரத்தில்தான் குடியரசு ஆரம்பிக்கப்பட்டு, டாக்டர் ஹோவின் அரசாங்கம் நாட்டில் வேலை செய்ய ஆரம்பித்தது.

ஆனால் பிரஞ்சு அரசாங்கம் டாக்டர் ஹோவின் அரசை ஒத்துக்கொள்ள மறுத்தது. போர்ப் படைகளை அனுப்பி வியட்நாமை மறுபடியும் தன் கைக்குள் கொண்டுவரவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டது. இந்த முயற்சியை ஜனநாயகத்தைப்பற்றி வானளாவப்பேசும் பிரிட்டன் ஒத்துக்கொண்டது! சண்டை முடிந்த ஒரு மாதங்களுக்கெல்லாமே பிரிட்டன் சைன்யங்களும் பிரிட்டிஷாரின் கீழிருந்த இந்திய சைன்யங்களும் பிரஞ்சு அரசாங்கத்திற்கு உதவி செய்ய வியட்நாமில் வந்திறங்கின. வியட்நாமியருக்கும், பிரஞ்சு பிரிட்டிஷ் துருப்புக்களுக்கும் தீவிரமான போர். இந்தப்போரில் 1946 ஜனவரி முடிவதற்குள் சுமார் ஒரு லட்சம் வியட்நாமியர் வீரமரணம் அடைந்தனர்! வியட்நாமியர்களுக்கு பெரும் ஆயுதங்கள் எதுவும் கிடையாது. ஜப்பானியரிடமிருந்து பறித்த துப்பாக்கிகள், வில், அம்பு, ஈட்டி, வாள் இவைகளே ஆயுதங்கள். இருந்தபோதிலும் அவர்கள் உள்ளத்திலே உணர்ச்சி இருந்தது— தைரியமிருந்தது. தங்கள் நாட்டைக் காப்பதற்கு இரத்தத்தைக் கடல் போலக்கொட்டினார்கள்! எலும்புகள் வியட்நாம பனைகளைவிட உயரமாகக் குவிக்கப்பப்பட்டன! ஹோசிமின் கொஞ்சங்கூட அஞ்சவில்லை. அரசியல் ஆருடம் தெரிந்த காரணக்கால் எவ்வளவு பலம்வாய்ந்த பிரஞ்சு சைன்யத்தையும் விடுதலை வேட்கை கொண்ட மக்களை வைத்துக்கொண்டு ஒழிக்கமுடியும் என்ற தைரியத்தோடு போரை நடத்தினர்.

தங்கள் போர்முறை வெற்றியைத் தராது என்பதைக் கண்டுகொண்ட பிரஞ்சு அரசாங்கம் 1946, மார்ச்சு, 6-ந்தேதி டாக்டர் ஹோவுடன் ஒரு உடன்படிக்கைக்கு வந்தது. அதன்படி கீழ்க்கண்ட முடிவுகள் ஏற்பட்டன.

"பிரஞ்சுக்காரர்கள் பிடித்திருந்த கொச்சின் சைனு பிரஞ்சு அரசாங்கத்திடமே இருக்கும்.

இருபக்கமும் போரை நிறுத்த வேண்டும். அமைதி உண்டான பிறகு பொதுவாக்கெடுப்பு மூலம் வியட்நாமுடன் கொச்சின சைனுவைச் சேர்ப்பதா இல்லையா என்று முடிவு செய்யப்படும்.

மறுபடியும் ஒருகூட்டு மகாட்டை கூட்டி அதில வியட்நாமின் முந்திய அரசியலமைப்பையும் மற்ற வெளிநாட்டுத்தொடர்புகளையும் முடிவு செய்யவேண்டும்."

இந்த உடன்பாட்டுக்குப் பிறகு தான் இந்தோசினுவில் அமைதி தோன்றஆரம்பித்தது. வீரத்தோடு போர்புரிந்து வெற்றிகண்ட வியட்நாமியருக்கு ஏராளமான பொறுப்பு ஏற்பட்டது. பஞ்சம் அவர்களை பயமுறுத்தியது. உணவுப் பிரச்னைக்கு குடியரசு அரசாங்கம் முதலிடம் அளித்தது. நாடெங்கும் ஜப்பானியர் அழித்துவிட்டுப்போன அணைக்கட்டுகள் திரும்பவும் கட்டப்பட்டன. அழிக்கப்பட்ட தொழிற்சாலைகள், புதுப்பிக்கப்பட்டன. தங்களுக்கேற்பட்ட மகத்தான பொறுப்பை யுணர்ந்த வியட்நாம் வாலிபர்கள் நாடெங்கும் பொதுப்பணியில் ஈடுபட்டனர். நாட்டின் அறியாமையைப் போக்குவதில் அவர்கள் உழைப்பு ஆச்சரியம் தரத்தக்க வகையில் பலனைக்கொடுத்தது. குடியரசு ஏற்பட்ட ஓராண்டுக்குள்ளேயே வியட்நாமில் படிக்கத் தெரியாதவர்கள் தொகை நூற்றுக்கு பதினைந்தாகக் குறைக்கப்பெற்றது. ஓராண்டுக்குள் 60,000 பள்ளி வகுப்புகள் நடத்தினர் விடுதலை வீரர்கள். சுமார் 80,000 ஆசிரியர்கள் தங்கள் உழைப்

பைத் தேசத்திற்காக அர்ப்பணி
தனர், மற்றும் ஒவ்வொரு துறை
லும் உணர்ச்சியுடன் ஒத்துழைத்
னர். வியட்நாமியர்கள். நாடெங்
புத்துணர்ச்சி பரவியது.

ஆனால் இந்தநிலையை வளரவி
பிரஞ்சு அரசாங்கம் விரும்பவில்
அது குடியரசுடன் சமாதான
செய்துகொண்டதிற்குக் காரண
இதுதான். சமாதானமூலம் ஏற்படு
இடைக்காலத்தில் பிரஞ்சுத்துருப்
களைச் சரிவரப்பயிற்சி கொடுப்பு
டன் மேலும் பலதுருப்புகளை பிரா
ஸிலிருந்து வரவழைப்பதற்குமே
ஆகவே இந்த எண்ணம் ஈடேறி
மறுநிமிஷமே ஏதோ காரண
களைக்கூறிக்கொண்டு குடியர
அரசாங்கத்தைத் தாக்கிய
பிரஞ்சு அரசாங்கம். டாக்ட
ஹோவும் தந்திரம் தெரிந்தவ
தானே! அவரும் இந்த நிலை
எதிர் பார்த்துத் தன் படைக
பெருக்கிவைத்திருந்தார், ஆகவே
45-ல் நடந்த போரை விடக் கடுமை
யான முறையில் போர் ஆரம்பி
தது மறுபடியும் வியட்நாம் குழ
பத்தில மூழ்கியது.

1947-அக்டோபர் முதல் மறுப
யும் போர். பிரஞ்சு அரசாங்கத்தி
துருப்புகளின் எண்ணிக்
20.0000-த் திற்கும் மேல். அவ
களுக்கு மார்ஷல் திட்டப்படி அமெ
ரிக்கா உதவும் முதல தரமான ஆ
தங்கள்; பீரங்கிகள்; ஆகாய விம
னங்கள் எல்லாம் துணையாக நி
கின்றன.

மற்றோர் பக்கத்தில் சுரண்ட
படும் கூட்டம். அந்த உணர்ச்சியின்
உருவங்கள் தங்கள் உயிரைப் ப
யாக வைக்கின்றன. அவர்களுக்கு
முதல் தரமான ஆயுதங்கள் கிடை
யாது. கடைசியாக கிடைத்த செ
திப்படி வியட்நாம் குடியரசி
போர்ப்படைகளின் எண்ணிக்கை
150,000-த்தை தாண்டுகிறது
இவர்களுக்கு பின்னால் வியட்நா
முழுவதுமே ஒரு முகமாக அணி
குத்து நிற்கிறது.

இப்படி ஆளும் வர்க்கத்திற்கு
அடிமைப்பட்ட வர்க்கத் திற்கு
போராட்டம் ஆரம்பமானது.

போரை நடத்தும் போதே பிர
சுக்காரர்கள் கொச்சின் சைனு

(13 ம் பக்கம் பார்க்க)

[ கருத்தில்பட்ட காட்சி ]

# பாங்கர் பணம் பெருத்தான்

(1)

[சோபாவிலே சாய்ந்துகொண்டு சோக பிம்பமாக இருக்கிறார் பணம் பெருத்தான் செட்டியார். மனைவி மங்கம்மா, 'நாலாவது முறை'யாக 'வல்லீங்களா, சாப்பிட' என்று வருத்தத்தோடு அழைக்கிறாள்!]

...ஏதடா, இது! பெரிய தொல்லைப் போயிடுச்சு......வயித்தைப் ...ச்சா நான் சாப்பிடறேன். ...க்கு ஏன், அப்படி அலர்றே!

...கடியாரத்தைப் பாருங்க ...மணி 12 ஆயிடிச்சே...

...ஆமு...? இங்கா பாரு, ...வீணு என்னை தொந்தரவு ...தே. வேணும்னு, நான் வந்து ...டறேன்......போ.

...யோசனை பண்றாராம்! அப் ...ந்தக் கோட்டையைப் பிடிச்சு ...போறீங்களோ!

...ஆமாம்! அதுதான் வாழு ...சுகமா, பொழுது விடிஞ்சு, ...து போறவரைக்கும்!

[கணக்கர் அம்மாஞ்சி வந்து, கையை கட்டிக்கொண்டு நிற்கிறார்.]

...யாரய்யா, அது! ஏன், வந்து ...மெ நிற்கிறே? வாயிலே என்ன ...ண்ணு இருக்குது? என்னய்யா ...வ தானு அவன்?

...யாருங்க...?

...உங்க பாட்டன் சேச்சே, ...ளோட மாரடிக்கிறதை விட, ...ந்து அழலாம்யா...கொஞ்சங் ...பொறுப்பில்லாத ஆளுக! ...'ஆடிடர்' என்னு சொன்னன்...

...அவரு......

...'போய்ப் பார்த்தேன். வீட்ல இல்லீங்க...' அதானே சொல்லப் போறே. எனக்குத் தெரியுமே...

...இல்லீங்க! ஐயாவைப் பார்க்...னுங்க. ஏதோ, இரகசியம் பேசணுமாம். வந்து, பாங்கிக் கணக்கிலே......

ப:- கணக்கிலே.........

க:- பெரிய தொகையா துண்டு விழும்......மில் கணக்கிலே சில இடங்கள் புரியலிங்களாம்......

ப:- ஏன், நீ எதுக்குப்போனியாம் எடுத்துச் சொல்லறதுதானே........

க:- சொன்னேனுங்க....செலவினம் எல்லாம் தெரியுது. வரவு வகையறு ஒண்ணும் குறிக்கலீங்களே......

[வெளியிலே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்கிறது.]

ப:- யார் அது வர்ரு, பாரும்! காலேஜ் கமிட்டியாளுகளாயிருந்தா ஐயா இல்லேண்ணு சொல்லும்!

க:- (திரும்பிவந்து) அவுங்க இல்லீங்க......வக்கீல்வரதராஜய்யங்கார்

ப:- வந்துவிட்டாரா? என்னஎழவு ஓலே வருதோ!

[வக்கீல் வருகிறார் வாயற்படி தாண்டி]

வாங்க...வாங்க...நான்கூடவரணும்னு, இப்பத்தான் நினைச்சேன். நீங்களே, வந்துட்டீங்க! உட்காருங்க........இந்தாய்யா கணக்கப்பிள்ளே, அந்த 'பானே' போடும்!

வ:- பரவாயில்லீங்க..........ஏன், என்னமோபோல இருக்காப்பலே இருக்கே!

ப:- அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க.........சாப்பாடு ஆயிடுச்சுங்களா!

வ:- ஆகா! அதெல்லாம், பத்து மணிக்கே முடிஞ்சுடுச்சு......நீங்க, கிராமத்துக்குப் போயிருப்பீங்கன்னுல்லே நினைச்சேன்!

ப:- போகணும்! ஆனு, எங்கே போக முடியறது? அது சரி. என்ன ஆச்சுங்க 'கேஸ்!'

வ:- 'வாய்தா' போட்டிருக்கான், அடுத்தவாரம்! சப்-இன்ஸ்பெக்டரைப்பார்த்தேன்.........செட்டியார் உங்களைப் பார்க்கணும்னு, கொஞ்சம் வர்ரீங்களான்னு கேட்டேன்... அவன் சிர்ரான் எனக்கென்னுங்க அவருகிட்டவேலே, அப்படிங்கிறான்.

ப:- அதுக்கும் ஒரு ஏற்பாடுசெஞ்சுட்டு வந்திருக்கேன். "பெரிய தொகை" கேட்பான்போலேயிருக்கு அதுக்குத்தான், அடிப்பீடம் போடறான்!

ப:- ரொம்ப மோசமாப்போயிட்டுதுங்க, அரசாங்கம். வெள்ளையன் காலத்திலே, சப்-இன்ஸ்பெக்டர்னு, என்கால், தூசுமாதிரி! இப்ப,பாருங்களேன், என்கிட்டேயே 'இலஞ்சம்' வாங்கப் பார்க்கறானுகளே!

வ:- என்ன செய்யறது செட்டியார்வாள்! 'கேஸ்' அப்படியல்ல இருக்கு, கையும் களவுமாவே பிடிச்சுட்டான். திருட்டுத்தனமா வெளிநாட்டுக்குப் பொருள் அனுப்பறது ரொம்ப ஆபத்தான 'கேஸா'ச்சே......

ப:- பிடிச்சா... நம்மகிட்டேவந்து சொல்றது. அல்லது தெரியப்படுத்தறது. நான், கவனிச்சுக்க மாட்டேனு? அதுக்குள்ளே, இவனைப் போய் யாரய்யா 'கேசு' பதிவு செய்ய சொன்னுங்க... சேச்சே, கொஞ்சங்கூட மட்டுமரியாதை தெரியாத பசங்களெல்லாம் ஆபீசராயிட்டாங்க. சுப ஜயமா! சுப ஜயம்.

என்னமோ நினைச்சுகிட்டான் என்னை. இவுங்க வீட்டுக் கிள்ளுக்கீரையில்லே நான்! எத்தனை கவர்னரு, இந்த வீட்டுக்கு வந்திருப்பாங்க தெரியுமோ...அதான் உங்களுக்குத் தெரியுமே. எனக்கு 'சர்' பட்டம் வந்தபோ, கலெக்டர் வந்தான். ஐயாவைப் பாக்கணும்னு சொல்லியனுப்பிச்சான். முடியாதுன்னு சொல்லச் சொன்னேன். காலையிலே வந்தவன் மத்தியானம் வரையிலே வெளியிலே காத்துக் கிடந்தான்...' அது, அந்தக் காலம்!

இப்பதான் என்னு, குடியா முழு கிப் போயிடுச்சு! பார்த்துக்கிறேன் ஒரு கை!

வ:– இதிலே, நீங்க ஆத்திரப்படக் கூடாது. நம்ப பேருதான் கெட்டு டும். நயமா, அவனேச்சரிக்கட்டுறது தான் நல்லது!

ப:– அவனுக்கு யாருங்ககொண்டு போய் ஐயாயிரமும், பத்தாயிரமும் அழுவாங்க......! அதை, வச்சு, இந்த உலகத்தையே வாங்கிப்பிட லாம்.........டேய்! யாரு அங்கே, காரை எடுக்கச் சொல்லு!

(இருவரும்கிளம்புகின்றனர். இருகார்களும், வெவ்வேறு திசை நோக்கிப் புறப்படு கின்றன.)

—2—

[சாய்வு நாற்காலியிலமர்ந்து கொண்டு பத்திரிகையைப் படித் துக்கொண்டிருக்கிறார்— இல்லை! — பார்த்துக்கொண்டிருக்கிறார் சந்தர்ப்ப முதலியார், சமீபத்தில காங்கிரஸ்காரரானவர், சிலதினங் களுக்குமுன் தான் பொதுக்கூட் டத்தில பேசியது, வந்திருக்கி றதா, என்று பார்க்க!

[உள்ளூர் 'தியாகி' தேசிங்கு, நுழைகிறார், தான் வருவதைக் கூறுவதுபோல 'பாடா' செருப் பைத் தேய்த்துக்கொண்டு!]

சந்:– யாரது? ஓஹோ.........நீயா வாய்யா, என்ன விசேஷம்....எங்கே இப்படி.

தே:– நமஸ்காரங்க...சும்மாபார்த் துட்டுப்போகலாம்னு வந்தேன். க்ஷேமந்தானுங்களே!

சந்:– அதுக்கென்ன குறைச்சல். இருக்கிறேன். இன்னும் உயிர்தான் போகலே!

தே.– என்னங்க...உங்கபெயரைச் சொன்னு ஊரெல்லாம்வாயை மூடுது நீங்களே இப்படிச் சொன்னு......

சந்:– ஊருக்கென்ன தெரியும்,என் மனசுல்லே உதைச்சுக்குது! என் னமோ நீங்களெல்லாம் சொன்னீங் களேன்னுதான் சேர்ந்தேன்.......... மாதம் ஒண்ணு இரண்டா, ஐஞ்சு, ஆறு, ஆச்சு! ஆறு, என்ன காரியம் முடிஞ்சுது. நகர காங்கிரஸ் கமிட் டித்தலைவர் ஆயிட்டேன்......எல்லா ரும் சேர்ந்து என்னைத் தள்ளிட்டிங்க கிணத்திலே!

தே:– இதென்னங்க, நீங்களா இப் படிப்பேசறது. நேற்றக்கூட, அவர் கிட்ட பேசிக்கொண்டிருந்தோம். என்னு, சந்தோஷப்பட்டாரு, உங்க பேரைச்சொல்லி.......நல்லவிருந்து, நல்லவிருந்துன்னு.......நினைச்சபோ தெல்லாம்சொல்லிக்கொண்டேயிருந் தாங்க!

சந்:– யாரு? எம். எல். ஏ. எத்தப் பிள்ளையா!

தே:– அவரு இல்லீங்க......நம்ப மந்திரியில்லே ஸ்ரீமான்......அவரு தான்.

சந்:– அவரா, என்னு சொன்னரு.

தே:– போனவாரம் நம்ப ஊருக்கு வந்தப்ப, நீங்க கொடுக்கலே ஒரு "பார்ட்டி" அதைப்பத்திதாங்க,அவ்வளவு சந்தோஷப்பட்டாருங்க!

சந்:–தேசிங்கு, நான் சொன்னு நம்பமாட்டே. மொத்தம் எவ்வளவு செலவு தெரியுமோ 1700 ரூபாய்...

அது கிடக்கு பணம். பணமா பெரிசு! தேசந்தை ஆள்ற, அவங்க ளுக்கு எவ்வளவு கஷ்டம்,தொல்லை! ஏதோ ஒருநாளைக்காவது, அவங்க மனசு, துளி குளிர்ந்தா சரி. அது தாங்க நமக்குப் பெரிசு!

தே:– நீங்க சொல்றது நூற்றிலே ஒரு வார்த்தைங்க! பணம என்னுங்க இன்னைக்குவரும், நாளைக்குபோகும். இதுபோல தேசசேவை, என்னைக் கும் நீடிச்சு நிற்கும்.........இல்லீங் களா?

சந்:– ஆமாமாம்! அப்புறம்,நீஏதா வது சொன்னீயா, நம்மைப்பற்றி!

தே:– சொல்லாமலா இருப்பேன். சொன்னேன். எங்க ஜில்லாவிலே பெரியபணக்காரரு.........ஏழைகன் னுவே, மனசு ரொம்ப இளகும்.... கோயில்கள் எத்தனையோ கட்டிருக் கிறார்......இன்னும் கட்டப்போறார். காங்கிரசிலே சேர்ந்தது இப்பதான், என்றாலும் அவரு எப்பவுமே காங் கிரஸ்காரர்தான்....

சந்:– அட, அது கிடக்கட்டு மய்யா. நம்ப இன்கம்டாக்ஸ், விஷ யமா, சொல்லச் சொன்னேனே சொன்னீரான்னு கேட்டேன்......

தே:– சொன்னேங்க......

சந்:– நீர் பலே ஆளாச்சே! எங்கே மறந்துட்டீரோன்னு நினைச்சேன்...

தே:– சொன்னேன். சொல்றேன் மந்திரிகிட்டே அப்படின்னரு!

சந்– மந்திரிகிட்டே சொல்றேன் னரா. யாரு? மந்திரியா......

தே:– இல்லிங்க...நம்ப எம்.எல்.ஏ எத்தப்பிள்ளைதான்!

சந்:– ஓஹோ, நீ, இவருகிட்டே தான் சொன்னீயா......

தே:– நானேசொலவேங்க, நானும் அவரும், "ஆகஸ்டு புரட்சி"யிலே ஒரே ஜெயிலிலே இருந்தோமுங்க! இருந்தாலும், என்னைவிட ஒரு எம். எல். ஏ. சொல்றதிலேதானுங்க Effect'

சந்:– என்ன எழவோ! அவரு எம். எல். ஏ. என்ன சொன்னரு?

தே:– உங்களை வந்து, சீக்கிரம்சந் திக்கிறேன்னருங்க......

பந்:– ஏன்?

தே:– சும்மா ஏதாவது,இருக்கும்.

சந்:– என்னமோ, எனக்கு ஒண் ணும் பிடிக்கலே! என்னய்யா...... நானும் காங்கிரஸ்காரன். அதுவும் ஒரு நகரகாங்கிரஸ் தலைவன்...அவ ரும் நம்ம கட்சி. கட்சிக்காரர் களுக்கு சவுகரியம் செய்துகொடுக்க லேன்னு, கட்சியாவது, கத்தரிக் காயாவது!

அப்ப, நான் ஜஸ்டிஸ் கட்சியிலே இருக்கறப்ப 'ஊம்'னு போதும், என் னென்ன நடக்கும் தெரியுமா! மந்தி ரியாவந்துட்டா போதுமா? மனுஷர், தாராதரம்தெரியணும்...குறைகளைத் தீர்த்துவைக்கணும்......அதுக்கெல் லாம் ராஜகளை இருக்கணும். இப்ப இருக்கிறதுக கிட்டே எங்கேயிருக் குது அது? ஒரே பிரேதகளைதான்!

தே:– நீங்களே இப்படிப் பேச லாங்களா. எல்லாம் கவனிக்காமலா போவாங்க. நமக்கும் வேலைவா வேண்டாங்களா?

ச:– என்னய்யா வேலை! எல்லாம், நம்பகையிலேதானேய்யா...இத்தனை நாளேச்சே. 'ஸ்மக்லிங்' கேஸ் தவிர, வேறு எதிலேயாவது, என்னு பலன் கிடைச்சிருக்கு...இல்லே நான்தான் கேட்கிறேன்!

[வெளியில் கார்வந்து நிற்கி றது. பேச்சை முதலியார்

வாள் முடிக்கவில்லை. எட்டிப் பார்க்கிறார். பணம் பெருத்தான் வருகிறார்...]

வாங்க! வாங்க! ஏது, இவ்வளவு ரம். உட்காருங்க...

ப:- சௌக்கியந்தானே!

ச:- அவன் கிருபையிலே ஒண்ணும் குறைவில்லை......

[பணம் பெருத்தான் தேசிங்கைப் பார்க்கிறார்...]

ப:- இது...

ச:- நம்ப தேசிங்கு. காங்கிரஸ் யாகி. தெரியும்னு நினைக்கிறேன்...

ப:- தெரியும். மறந்துட்டேன். ங்கேங்க, எவ்வளவோ தொல்லை ன் மனுஷனை ஆட்டறப்போ. நேத் ப் பாத்தவங்களேயே இன்னைக்கு ஞாபகம் இல்லீங்களே! இப்ப என்ன செய்துண்டு இருக்கார்?

ச:- தேச சேவைதான்...

ப: ஊம்......அப்புறம், மில்லெல்லாம் நல்லா நடக்குதுங்களா? 'கேஸ்' ப்படியிருக்கு?

ச:- 'கேஸ்' முடிஞ்சுப்போயிடுச் ங்க! தீர்ப்பு நம்ம பக்கந்தான். ந்த 'இன்கம் டாக்ஸ்' எழவுதான் இழுத்துக்கொண்டு நிக்குது!

ப:- அதையேன் கேக்கறீங்க! இரவென்னும் பாக்காமே, பகலென்னும் பாக்காமே ஓடியாடி அலைஞ்சு, ம்பாதிச்சு, கடைசியிலே, இவனுளுக்குக்கொட்டி அழத்தான் சரியாயிருக்கு! சுயராஜ்யம் நடக்குதாம்... யாருக்குன்னு கேட்கிறேன்...... வெளியே பேசினா 'பணக்காரன் ஒழிக'ன்னு கூச்சல்! பணக்காரன் படுறபாட்டை, கேட்டால்லதெரியும்!

ச:- சொல்லுங்க! கேட்டுக்கோ தேசிங்கு. தெருக்கோடியிலே கூட்டம் போட்டுத் திட்டுறான்களே, எப்படியிருக்கு எங்க நிலைமைன்னு கேட்டுக்கோ. கேட்டுத்தான் என்ன பிரயோசனம். மறுநாள் கூட்டம் போட்டு நீ அவனுக வாயை அடைக்கவா போறே!

தே:- அதென்ன அப்படிச் சொல்றீங்க...எப்ப கூட்டம் போட்டாலும் இதைப்பத்தியில்லாமே, வேறே எதைப்பத்திங்க பேசறோம்!

ச:- பேசி என்ன வாழ்ந்தோம்... எல்லாம் நம்ப வந்த வழி. யாரைச் சொல்லி என்ன பிரயோஜனம்...

அப்புறம், உங்க விவகாரங்களெல்லாம்...எப்படியிருக்கு? தீர்ந்ததா?

ப:- எங்கேங்க...அது சம்பந்தமா பேசலாம்னுதான் வந்தேன்...

[தேசிங்கு இருப்பதை கண் ஜாடையில் உணர்த்துகிறார் பணம் பெருத்தான். சந்தர்ப்பமுதலியார் அதைப் புரிந்துகொண்டு......]

ச:- அப்புறம் என்ன தேசிங்கு... ஏதாவது விஷயம் இருக்கா. நானும் அண்ணாச்சியும் கொஞ்சம் தனிச்சுப் பேசணும்...

தே:- ஒண்ணும் விசேஷமில்லீங்க ...மகாநாட்டுக்குப் போகலாம்னு இருக்கேன்...

ச:- எங்கே.......தேனம்பேட்டை மகாநாட்டுக்குத்தானே.....போயிட்டுவா! வந்து, எல்லாம் சொல்லு, நான் வர்லேன்னு யாராவது கேட்டா, ரொம்ப உடம்புசவுகரியமில்லேன்னு சொல்லு! வர்றத்துக்கு எனக்கும் ஆசைதான். எல்லா மந்திரிமார்களேயும் பார்த்தாப் போல இருக்கும். பார்க்கிறேன்......என் அண்ணாச்சி நாம்ப போய்ட்டு வருவோமா?

ப:- யோசிக்கலாங்க!

தே:- வந்து......

(தேசிங்கு 'எதற்கோ' அடிப்பீடம் போடுவதை அறிந்துகொண்ட முதலியார்)

ச:— சரி! நாளைக்கு வா விபரமாப் பேசிக்குவோம்.

(தொண்டர் வெளியேறுகிறார். இரு 'முதலை'களும் பேச ஆரம்பிக்கின்றனர்)

ச:— அந்த 'துணி ஸ்மக்லிங்' என்ன ஆச்சு?

ப:- என்னத்தை ஆகிறதுங்க... சப்-இன்ஸ்பெக்டரை புடிச்சு 'வாய் கட்டை' போடலாம்னு நினைச்சா, அவன் ஒரேயடியாத் துள்ளுறானும். மனுஷனுக்கு தொல்லைமேலே தொல்லைங்க...தூக்குப் போட்டுகிட்டு சாகலாமான்னு இருந்த...உங்ககிட்டே சொல்லாமெ யாருகிட்டே சொல்லி அழறது......வட்டிக்குக் கடன் கொடுத்து வர்றேன் பாருங்கோ... அந்தக் கணக்கை 'இன்கம்டாக்ஸ்' காரன் பார்க்கணும்னு தினம் 'ஓலை' விட்டுக்கொண்டே இருக்கான்!

கிராமத்திலேருந்தோ, ஆட்கள் கூலி அதிகம் கேட்கிறான்னுட்டு தினசரி ஆளுமேல் ஆள்வந்துகொண்டேயிருக்கான்!

மில்லிலேயோ, இவுங்க ஆர்ப்பாட்டம் சகிக்கலே...'ஆறு லட்சம் சம்பாதிச்சிருக்கியே. அரை லட்சம் அலவன்சாகக் கொடேன்'னுட்டு மகஜர்! நாம்ப சம்பாதிக்கிறதுக்குப்பேர் 'கொள்ளை' அடிக்கிறதாம்...இந்த கேடு கெட்டதுகள் சொல்றது...... நம்ப படுற கஷ்டம் யாருக்குத் தெரியுது. ரொம்பத் தொல்லையாப் போச்சுங்க...ஒண்ணும் சமாளிக்க முடியலே!

ச:- ஊம்...என் கதையைக் கேட்டீங்கன்னா, இன்னும் வேடிக்கையாயிருக்கும்! மூணு வருஷமாக் கணக்குக் காட்டலியா? ஒரே சிறு, சிறிப் பாய்ந்தான் 'இன்கம்டாக்ஸிலே'! 'ஸ்மக்லிங்' கேஸிருந்ததுதான், அண்ணாச்சிக்குத் தெரியுமே, நம்ப ஆளுக சரக்கைக் கொண்டு போனப்ப மாட்டிக்கிட்டது... அது வேறே, ஏகப்பட்ட தொல்லை, ஜெயிலுக்குக் கூடப் போகணும்போலே ஆயிடுச்சு...... நம்ப வக்கீல் கூட அப்படித்தான் சொன்னாரு...எனக்கு ஒண்ணுமே புரியலே! நிஜமா, அண்ணாச்சி, ஒரு நாள், ராத்திரி சுட்டுக்கிட்டு செத்துப்பூடுவோமான்னுகூட நினைச்சேன்...ஆனா, நல்லவேளையா ...நம்ப மருமகபிள்ளை வந்து, ஒரு யோசனை சொல்லி காப்பாத்திச்சு!

(11-ம் பக்கம் பார்க்க)

## அவரது கருத்து!

"இந்தியாவுக்குத் தேவையாக இருப்பது பணமல்ல. ஐக்ய முன்னணி அமைக்கும் நல்லெண்ணமும், நம்பிக்கையுந்தான். ஏராளமான வசதிகளைப் படைத்தநாடு இந்தியா. சரக்குகளை வாங்கும் மக்கள் தொகையும், இங்கு ஏராளம். எனவே, வெளிநாட்டு உதவி விருப்பத்தக்கதல்ல. இது, தானே வலையில்போய் மாட்டிக்கொள்வதாகும்"

ஆக்ரா பிப் 6. } பிரிட்டிஷ் நிபுணர் சாலமன்டார்னே.

# திராவிட நாடு

ஞாயிறு 19-2-50 காஞ்சி

## கேட்டது வாழ்வு கிடைத்தது சாவு

★

சேலம் சிறையிலே, கம்யூனிஸ்டுக் கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற செய்திகேட்டு, நாட்டிலுள்ள நல்லறிவாளர்களெல்லாம், வேதனை அடைந்துள்ளனர்.

22 பேர் பிணமாயினர்; நூற்றுக்கு மேற்பட்டவர்கள், காயமடைந்துள்ளனர். இந்தச்செய்தி நம் நாட்டிலே மட்டுமல்லாமல், உலகிலேயே ஒரு பரபரப்பை உண்டாக்கக்கூடியது.

குடி அரசு அருப்பி திங்கள் ஒன்றும் முடியவில்லை — இதற்குள் சிறையிலே துப்பாக்கித் தாண்டவம் செய்கிறது. மக்களாட்சி மலர்ந்தது, பிணவாடை பரவுகிறது.

'ராமராஜ்யம்'—நடைபெறுகிறது, சிறையிலே பிணங்கள்!

கேட்டதும் மனதைப் பதறச் செய்யும், பயங்கரமான சம்பவம், ஏழை பங்காளர்களின் ஆட்சியில நடைபெற்றிருக்கிறது.

கேட்டது வாழ்வு—கிடைத்தது சாவு.

தக்ளியைக் காட்டினர் மக்களிடம் —முன்பு — இப்போது துப்பாக்கி பேசுகிறது.

சிறையிலிருந்த கம்யூனிஸ்டுக் கைதிகள் கையில் கிடைத்ததைக் கொண்டு தாக்கினராம், சிறை அதிகாரிகளை—எனவே, துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனராம், 22 பேர்களை —137 பேருக்குமேல் காயமுற்றுக் கிடந்தனராம்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியதற்கான காரணம் இதுவென்று அதிகாரிகள் கூறுகின்றனர்—சர்க்காரும் அறிக்கை விடுத்திருக்கிறது.

வேலியும் சுவரும் வைத்து நாற்புறமும் பாதுகாப்புடன் கூடிய சிறைச்சாலைக்குள், சிறு இடத்தில், அடைக்கப்பட்டிருக்கும் 220 கைதிகளின் மீது துப்பாக்கிக் குண்டுகள் விளையாடியிருக்கின்றன; 22 உயிர்கள் சாவுலகுக்கு அனுப்பிவைக்கப்பட்டுவிட்டன; 137 உருவங்கள் குண்டுகளால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில கிடக்கின்றன —சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனராம், அரசாங்கம் அறிவிக்கிறது!

மனித உள்ளங்களைக் குலுங்க வைக்கும் சோகமயமான, இத்துயர நிகழ்ச்சியால், நாட்டு வரலாற்றின் ஒரு ஏட்டை இரத்தமயமாக்கிவிட்டன.

சுதந்திரப்போரில் தடியடி, சிறை, கொடுமைக் கணைகள் தாங்கித் தியாகத் தழும்புகளைப் பெற்றவர்கள், நல்லது நடக்கும் என்று நம்பியது, நாடு. பொதுஜன சர்க்கார், ஏற்படுகிறது, அடக்குமுறை தர்பார் இருக்காது. அல்லல் நீங்கும் என்று மக்கள் எதிர்பார்த்தது—பார்ப்பது —ஏராளம். ஆனால் ஆசை கரைகிறது; துக்கம் படர்கிறது!

வெள்ளை ஏகாதிபத்தியம், வெளிநாட்டான் கொடுமைப்படுத்துகிறான்; என்று கலங்கிய மக்களின் ஆதரவு காங்கிரஸ் கட்சியை நிர்மாணித்தது, 'நம்ம சர்க்கார்' உதயமானால் நன்மைகள் மலரும் என்ற ஆசையோடு. இந்த உண்மையை, இவ்வளவு விரைவில், ஆட்சிபீடம் ஏறிய இவர்கள் மறந்துவிட்டது, பரிகாசத்துக்குரியதல்ல; பரிதாபமானது!

இருபத்து இரண்டு உயிர்கள்— நினைத்தாலே நெஞ்சு கொதிக்கிறது- பிணமாகிவிட்டன; இனி அவைகளை இந்த உலக அரங்கத்தில காண முடியாது! ஆமாம், செத்துவிட்டனர் — இல்லை! சாகடிக்கப்பட்டுவிட்டனர்!

அகிம்சை, அன்பு என்று சொல்லி வந்திருந்த இவர்கள் ஆட்சியிலே இதுபோன்ற நிகழ்ச்சிகளை நாடு மட்டுமல்ல, உலகமே எதிர்பார்த்திருக்காது. எனினும் இன்று, இதுபோன்ற சம்பவங்கள் நித்திய நிகழ்ச்சிகளாகிவிட்டன!

பரீலி மாணவர்கள்மீது, நாசிக்கில், கல்கத்தாவில் துப்பாக்கிப் பிரயோகம் என்று, செய்திகள் தினசரி வந்துகொண்டிருக்கின்றன. பழனிக் கருகில், ஒரு கம்யூனிஸ்டைக் கைது செய்யப் போனபொழுது அவன் தப்பி ஓடினனாம்; உடனே துப்பாக்கி வேலை! அவன் பிண[...]தரையில் வீழ்ந்திருக்கிறான்-நான்[...] நாட்களுக்கு முன்.

அன்பை நம்பியே ஆட்சி நடத்[...] போவதாகக் கூறியவர்கள் இன்[...] துப்பாக்கி முனையில் துரைத்த[...] நடத்துகின்றனர்—இந்தியாவிலுள்[...] எல்லா மாகாணங்களிலும் இ[...] காட்சிதான் நடைபெறுகிறது, து[...] பாக்கி ஆட்சிதான் நடத்தப்[...] கிறது.

பலாத்காரம், நாசவேலைகள் [...] மைப் பொறுத்தவரையில், இன்[...] எப்போதுமே பிடிக்காதவைக[...] இவைகளால் நாடு நாசமாகு[...] தவிர, நல்ல மலர்ச் சோலை பா[...] குமே ஒழிய—நன்மை மலர மு[...] யாது என்று கருதுபவர் நா[...] 'ஆகஸ்டு' கலவரம் நடத்தியபோ[...] 'புரட்சி' என்று செப்பிக்கொண்[...] —நாட்டைச் சிதைக்கும் ந[...] வேலைகளில் இன்று ஆட்சிபீட[...] மிருக்கும் காங்கிரஸ் அன்பர்[...] ஈடுபட்டபோதும் நாம் கண்[...] தோம். இதுவல்ல, உரிமை பெற[...] வழி என்று கூறினோம். இன்[...] நாம் கண்டிக்கிறோம்—கம்யூனிஸ்[...] கட்சியாயிருந்தாலுஞ் சரி, சோஷ[...] லிஸ்டுகளாயிருந்தாலுஞ் சரி, வே[...] எக்கட்சியாயிருந்தாலுஞ் சரி[...] பலாத்காரத்தைத் துணைக்கழை[...] பது, கூடாது, தகாது என்று [...] நுகிறோம்.

நாசவேலைகளில் ஈடுபட்டு மக்[...] வாழ்வைச் சூறையாடுபவர் எவ[...] யிருந்தாலும் அவர்களை, அட[...] வேண்டியதுதான் — நாம் மறு[...] வில்லை.

ஆனால் 'நாசவேலை செய்கிறார்க[...] என்று குற்றஞ் சுமத்தி, ஒரு கட்[...] யைச் சேர்ந்தோரை யெல்லா[...] கைக்கு அகப்பட்டால் கொண்[...] போய் அடைப்பதும் பிடி[...]ல் சிக்[...] மல் ஓடினால் சுட்டு வீழ்த்துவது[...] மனித உள்ளங்கொண்ட எவரா[...] சகிக்க முடியாததாகும்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்[...] பிடிக்கவில்லை. நாசவேலை செய்கின்[...] னர் என்று காரணங் கூறி சில மா[...] ணங்களில் கட்சியை சட்டவிரோ[...] மாக்கியிருக்கின்றனர். சில மா[...] ணங்களில் சட்டவிரோதமாக்[...] வில்லை

அவர்கள் போக்கு பிடிக்கவில்[...] யென்று, அவசரச் சட்டத்[...]

மூலம், ஆயிரக்கணக்கானவர்களை, சிறைச்சாலைகளுக்குள் அடைத்து வைத்திருக்கிறது அரசாங்கம் — மாதக் கணக்கில் அல்ல, வருடக் கணக்கில்!

பாதுகாப்புக் கைதிகளாக, இன்றைய ஆளவந்தாரில், சிலரும் பிரிட்டிஷ் ஆட்சியின்போது, சிறைக்குள் அடைபட்டுக் கிடந்தவர்தாம். அப்போது, வெளியிலிருந்தோர் நடத்திய ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் கூட்டங்கள், இன்னும் மனதை விட்டு மறையவில்லை. "விசாரணையில்லாமல் சிறையில் பிடித்துப் போடுவதா! மனிதர்களா அல்லது மிருகங்களா? வெள்ளை ஏகாதிபத்தியம் ஒழிக!" என்று, வீர முழக்கங்கள் செய்யப்பட்டன காங்கிரஸ்காரர்களால் என்று மட்டுமல்ல. பொதுமக்களால்கூட! சிறையில் சிறு சம்பவம் நடைபெற்றால்கூட, வெளியிலிருந்தோரும், 'தேசிய பத்திரிகைகளும்', அன்று எழுப்பிய கண்டனக் கூச்சல்கள் ஏராளம் — இதை நாடு மறந்திருக்காது. 'சுயராஜ்யத்துக்குப் பாடுபடுவர்களை வெள்ளைக்காரன் ஜெயிலில் போட்டு சித்திரவதை செய்கிறானே. என்ன அக்கிரமம்!' என்று கிராமம் முதல், நகரம் வரை மக்கள் மன்றம், அன்று, கொதித்தது!

நம்முடைய சர்க்கார் இருந்தால் இந்த கேடு நடைபெறுமா என்று கேட்டனர், இன்றைய ஆளவந்தாரான, காங்கிரஸ்காரர்கள், அன்று மக்களைப் பார்த்து. 'ஆமாம், அக்கிரம ஆட்சிதான் அந்நிய ஆட்சி! கூடாது' என்று குமுறினர் மக்களும்.

பொதுஜன சர்க்கார், என்ற புனிதம் நிரம்பிய பெயரைக் கூறிக்கொண்டு, நாட்டை ஆளத் துவங்கினர். மக்கள் 'நம்ம சர்க்கார்' ஏற்பட்டுவிட்டது! என்று பூரித்தனர். ஆனால், மாறுதல் இல்லை, போக்கில், ஆட்சியில, அட்டகாசத்தில்!

நாசவேலை செய்யும் கட்சியோ, ஆளோ, அடக்கப்பட வேண்டியதுதான். மக்களுக்குத் துயரம் தரும் தொல்லைப் பெருக்கிகள் அடக்கப்படவேண்டும் என்பதில், நலம்விரும்பும் எவரும் கருத்து வேற்றுமை கொள்ள மாட்டார்கள்.

ஆனால் 'நாசவேலை நடக்கிறது' என்று காரணம் கூறிவிட்டு, கண்டோரை யெல்லாம் சிறையில் பிடித்துத்தள்ளி, அட்டகாசம் செய்வதை நாகரீகப் பண்புடையவர் ஏற்க முடியாது.

குற்றம் செய்தவர்களை விசாரிக்க, தண்டனை வழங்க நீதிமன்றங்கள், இருக்கின்றன. நாசவேலைகளில் ஈடுபட்டோரை, விசாரித்து தீர்ப்பு வழங்க நீதிபதிகளும் இருக்கிறார்கள். ஆனால், இந்த நேர்மைப்பாதை, 'ராமராஜ்ய' நண்பர்களுக்குப் பிடிக்காதது, வியப்பூட்டும் சம்பவமல்ல; வேதனை நிரம்பியது!

அவசர சட்டத்தின் மூலம், சந்தேகப்பட்டோரையெல்லாம் பிடிப்பதும், கொண்டு போய் சிறையில தள்ளுவதும் விசாரணையில்லாமலே ஆண்டுக் கணக்கில் வைத்திருப்பதும், சகிக்க முடியாதது.

எந்தச் செயல்முறைகளை, இன்றைய ஆளவந்தார், அன்று கூடாது, கொடுமை என்று குமுறிக்கொந்தளித்துக் கூறினரோ அவைகளை இன்று அணைத்துக் கொள்கின்றனர் — அடக்குமுறைப் பாதையில நடந்து செல்கின்றனர்! துப்பாக்கித் துரைத்தனர் நீடிக்கவிடுவர், ஆட்சியிலிருப்போர் நாமதாமே, என்ற அலட்சியத்தால், செருக்கால்!

சிறையில, விசாரணையில்லாமல் பூட்டிவைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக்கைதிகளிடையே குமுறலும் கொந்தளிப்பும் இன்று நேற்றல்ல; பல மாதங்களாகவே ஏற்பட்டு வளர்ந்து வருகின்றன. 'விசாரணை அல்லது விடுதலை' என்ற முழக்கத்தோடு, அவர்கள் அடிக்கடி பலவிதமான கிளர்ச்சிகளில இறங்கிவருகின்றனர். இதையெல்லாம் அறிந்தும், அடக்குமுறைப் பாதையைத்தான் ஆட்சியாளர் தமக்குரியதெனக் கருதி நடந்து வருகின்றனர்!

விளைவு, 'சேலம் பரிதாபம்!' 22-உயிர்கள் பிணமாயின! சுட்டுக் கொல்லப்பட்டன!

பரிதாபமும் கொடுமையும் நிரம்பிய இச்சம்பவம் பற்றி விசாரணை செய்ய சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாக அறிகிறோம். விசாரணை அதிகாரிகளில், பொது மக்கள் சார்பில் ஒருவர் இருக்க வேண்டியது அவசியம். ஒரு மாஜி நீதிபதி, வக்கீல், கலெக்டர் மட்டும் இருந்து விட்டால் போதாது — மக்கள் எண்ணங்களை எதிரொலிக்கும் பொதுத் தொண்டர் ஒருவராவது இருக்கவேண்டும். தொழிலாளர்தலைவர்களாகிய திரு. வி. க. சக்கரை ஆகிய பலர் இருக்கின்றனர்!

அப்படிக்கின்றி, ஏதோ விசாரணை, என்ற பெயரில் நடத்திக் காட்டிவிட்டால், போதாது. நாளை மக்கள் மன்றத்துக்குப் பதில்சொல்ல வேண்டியவர்கள் இன்றைய ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் — சிறைச்சாலை மந்திரிகளல்ல!

பொதுஜன சர்க்கார் என்றால் நாட்டில் கலவரமும், நாசமும் ஏற்படாமல், நல்ல நிலையில் வைத்திருப்பதற்குத்தான் பெயர். மக்களிடையே மகிழ்ச்சியை மலரவைக்கும் சர்க்காரையே மக்கள் சர்க்கார் என்று அழைப்பர்.

மக்களுக்குக் கேடும், கெடுதியும் ஏற்படுகிறது என்றால் அதை, நீதியின் துணைகொண்டு நேர்மையோடு சமாளிப்பதற்குத்தான், உண்மை ஆட்சி என்று, உணர்ந்தோர் பெயர் கொடுப்பர்.

நீதியை மறந்து விரும்பியோரையெல்லாம் பிடித்துப்போட்டு, துயரமிழைத்தால் அது, அட்டகாச சர்க்கார் என்ற பெயரைத்தான் பெறும்! அந்நிய ஆட்சியின் அட்டகாசத்தில் சிக்கிச் சிதைந்த மக்கள், வாழ்வு கேட்கின்றனர், நன்மையைக் கோருகின்றனர்; துப்பாக்கிக் குண்டுகளையல்ல! வாழ்வு கேட்கின்றனர் — சாவு அல்ல! வேதனையால் மக்கள் உள்ளம் கொதித்துக்கிடக்கிறது; கண்களில் நீர் ததும்பி, துயரமயமாய் நிற்கின்றனர்; பிணங்களை நினைத்துக் கொண்டு, துப்பாக்கிக் குண்டுகளை எண்ணியவண்ணமாய்!

ஆளவந்தாருக்கு, அதைக் காட்ட விரும்புகிறோம். பொங்கும் கடல் வெடிக்கும் எரிமலை, மக்கள் மன்றம். வேதனையோடு விளையாடாதீர்கள், வாழ்வு கொடுங்கள், சாவு வேண்டாம் என்ற மக்கள் முழக்கத்தை எதிரொலிக்க விரும்புகிறோம்!

## வருந்துகிறோம்

அன்பு நண்பர், புதுக்கோட்டை 'பொன்னி' நிர்வாகி தோழர் அரு. பெரியண்ணன் அவர்களின் தந்தையார் தோழர் அருணாசலம் அவர்கள் 13—2—50 அன்று இயற்கை எய்தினார் என்பதறிய வருந்துகிறோம். தந்தையை இழந்த நண்பருக்கும், உறவினருக்கும், நமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

# தம்பிரான் சண்டை

கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள்......ஐகோர்ட் வரை போயிருக்கிறார்கள், தங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ள! 'அலவன்சு தரவில்லை என் அந்தஸ்துப்படி என்னை நடத்தவில்லை' என்று கிளம்பியிருப்பவர்—மேலேயிருப்பவர்மீது 'கேஸ்' போட்டு ஜெயித்துவிட்டார்!

பகல் முழுதும் பாடுபடுகிறேன், இவர் ஆலையில்! எனக்குச் சேரவேண்டிய 'அலவன்ஸ்' தொகையை, தர மறுக்கிறார்...இது நியாயமா, கூறுங்கள் என்று இடுப்பொடியும் ஏழையொருவன் தன் எஜமானனையெதிர்த்துத் தாக்கல் செய்த வழக்கல்ல இது!

வயலிலே வேலை செய்யும் விவசாயி, தனது உழைப்புக்கான கூலியை மிராசுதார் தரவில்லை, 'இல்லை, ஏதடா' என்று கூறுகிறார் என்று புகார் செய்ததின்மீது நடைபெற்றதுமல்ல இந்த வழக்கு!

விவசாயி — தொழிலாளி அவர்களால் எப்படி முடியும், ஐகோர்ட் வரை போக! பணந்தான் ஏது, பக்கத் துணைக்குத்தான் ஆள் ஏது! பாவம், அவர்கள் ஏழைகள்தானே!

எனவே, இந்த வழக்கு இது போல 'இகலோக' வாழ்வில் இச்சை கொண்ட பஞ்சைப் பாமரர்கள், ஒருவர் மீதொருவர் குரோதம், விரோதம் காரணமாக நடத்தியதல்ல!

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய இகலோகப் பற்றுக்களை ஒழித்தார் என்று போற்றப்படுபவர்கள் — இந்த மூன்று ஆசைகளையும் ஒழித்தால்தான் 'முக்தி'க்கு வழி என்று புத்தி போதிப்பவர்கள்! 'ஈசா போற்றி! என்னை இம்மாயாலோக பந்தங்களிலிருந்து விடுவித்தாய் போற்றி! என்னை ஈடேற்றுவாய் போற்றி!' என்று, எந்நேரமும், மோக்ஷ சாம்ராஜ்யத்துக்குப் போவதற்காக, முனைந்து நின்று, காவி தரித்து, குடும்பம் துறந்து, இம்மாயாப் பிரபஞ்சத்தின் ஆசாபாசங்களில் சிக்காது, அல்லும் பகலும் அனவரதமும் பூஜித்துக் கிடப்பதாகக் கூறப்படுபவர்கள்! மக்களை ஈடேற்றும் மகானுபாவர்கள் என்று கருதப்படுபவர்கள்—சைவ சன்மார்க்கத் தூதுவர்கள்—இருவர், கோர்ட்டிலே போய் 'குடுமி'யைப் பிடித்துக்கொண்டு நின்றிருக்கிறார்கள்!

மூன்று ஆசைகளையும் ஒழித்தால் மோக்ஷம் என்று போதனை புரியும் இப்பெம்மான்கள் பொன்னாசைக்காக, போராடியிருக்கின்றனர் — தம்பிரான் வெற்றி பெற்றிருக்கிறார்! பண்டார சன்னதி தோற்றிருக்கிறார்!!

வேடிக்கையானதல்ல — "சந்திரகாந்தா" படக் காட்சியுமல்ல, கிண்டல் கதையின் ஒரு கட்டமுமல்ல — கண்ணுக்கெதிரே நடந்தது, கடந்த பிப். 8-ந் தேதியன்று சென்னை உயர் நீதி மன்றத்திலே இரு நீதிபதிகள் முன்னிலையில்!

திருவாவடுதுறை மட ஆதீனத் தலைவர் பண்டார சன்னதிக்குக் கீழ்பட்ட தம்பிரான் ஒருவர்தான், வழக்குத் தொடுத்தவர். தனது அந்தஸ்து, தன் நிலைமை, தானிருக்கும் இடம் ஆகியவைகளை அனுசரித்துப் பண்டார சன்னதி தனக்கு அலவன்சு — அதுவும் சாதாரண அலவன்சல்ல "சொந்த அலவன்சு" (Personal) — தரவில்லையென்பதுதான், புகார்.

சைவத்தைக் கரைத்துக் குடித்து, சைவர்களின் கண்கண்ட தெய்வமாக இருந்து, இகலோக வாழ்வை வெறுத்து 'எப்போது உன்னடி சேர்வேன்? ஈசா! பரமேசா!' என்று இருப்பவர், இருக்கவேண்டிய தம்பிரான், தனது அந்தஸ்து, நிலைமை ஆகியவைகளை அனுசரித்துச் சொந்த அலவன்சு தரவில்லையென்று கேஸ் போட்டுள்ளார், தனது தலைவரான பண்டார சன்னதிமீது!

காமக்குரோதாதிகளில் மயங்கி நாயினுங் கேடாய் நலிந்திடும் மக்களை உய்வித்து, நல்ல 'கதி' அடையச் செய்வதே எங்கள் தொண்டு, ஈசுவர சேவைக்கே எங்களை அர்ப்பணித்துக்கொண்டுள்ளோம் என்று சொல்லித்திரியும் தம்பிரான், சொந்த அலவன்சு கோரியிருக்கிறார்.

இகத்தை வெறுத்து, மக்களை ஈடேற்றும் மாபணியில், இறங்கியிருக்கும் இம்மகானுபாவர்கள், 'கிடைத்த இடத்தில் இரண்டு பிடி அன்னம், கிடைக்காவிட்டால் சரிதான் இதுவும் ஈசன் விட்ட வழி' என்று சென்று விடுபவர்களல்ல! அவ்வளவு கஷ்டநிலையில் வைக்கப்படாதவர்கள்!

சுகபோகமான நிலையில் வாழும் வசதியிலிருப்பவர்கள். 'கேஸ்' போட்ட இத்தம்பிரானுடைய, வருடச்செலவுக்கென, நெல் கொண்டு போய் கொடுப்பார்கள்—ஆதீனத்தைச் சேர்ந்த நிலங்களிலிருந்து அறுவடை செய்து வந்ததில், அவருக்கு ஓராண்டுக்குத் தேவையானது எவ்வளவோ அதைக் கொண்டு போய்ப் போடுவர்—

உலகை 'உய்விக்க' வந்த 'உத்தமருக்கு' உழைத்துக் கஷ்டப்பட்டு, வெட்டி, உழுது விதை விதைத்து, அறுத்து, மணிமணியான நெல் கொண்டுபோய் கொட்டப்படும்!

அவ்வகையில் 'கேஸ்' போட்டாரே, தம்பிரான், அவருக்கும் ஆண்டாண்டு தோறும், அவருடைய செலவுக்கெனக் கொண்டுபோய் நெல் கொடுப்பதுண்டு. 'அப்படிக் கொடுத்து விட்டால் பட்டும் போதுமா, எனக்கென்று செலவுகளில்லையோ, நான் என்ன ஏமாந்தியா?' என்றுதான், தம்பிரான் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

என் அந்தஸ்து (Status) என்ன அதற்குத் தக்கபடி என்னை நடத்தவேண்டாமோ என்று கேட்டிருக்கிறார்! ஆமாம், இறைவன் சந்நிதியில் 'நான் யார்' நீயார்? அவன்யார்? எல்லாம் யார்? என்ற கேள்வியைக் கேட்டு, 'ஏதப்பா வித்தியாசம். எல்லோரும் எம்பெருமானின் திருவிளையாடலிற் சிக்கியவர்கள்!' என்று போதனை புரிந்துவிட்டு, 'அரகரா மகாதேவா' என்று அடிக்கொருதடவை பஜிக்கும் தம்பிரான்—அந்தஸ்துக்குத் தக்கபடி தன்னை நடத்தவில்லையென்று புகார் செய்திருக்கிறார் 'பேர்சனல் அலவன்ஸ்' கேட்டு, வழக்குப் போட்டிருக்கிறார்!! உட்

...ர்ந்த இடத்திலேயே, ஊர் வம்பைத் தெரிந்துகொண்டு, உடப்பு அலுக்காமல், பாலும் பாதாமும் பாயாசமும் நெய்சோறுமாய்ச் சாப்பிட்டுக்கொண்டு கவலையற்றவராய் இருந்து வரும் தம்பிரான் தனக்குக் கொடுக்கும்படி கோரியிருக்கும் சொந்த அலவன்ஸ் எவ்வளவு தெரியுமா—ஐந்நோ, பத்தோ அல்ல—ஒரு குமாஸ்தாவின் சம்பளம், ஒரு தொழிலாளியின் இரண்டுமாத உழைப்புத்தொகை 75 ரூபாய்கள்!! மாதாமாதம் இத்தொகை தனக்குச் சேரவில்லையென்றுதான், அவர் வழக்குத் தொடர்ந்தது!

X X X

"தம்பிரான் கேட்டாரா, பரம்பொருளின் அனுக்கிரகம் கிட்டி மாயாலோக ஆசை இன்னும் மனதிலிருந்து மறைந்து விடவில்லை போலும், பரவாயில்லை வரவரச் சரியாகிவிடும், கேட்டதைக் கொடுங்கள் என்று, தம்பிரான்களின் எஜமான், பல கோயில்களின் பண பெட்டியை உடையவர், ஏராளமான வயல்கள், நஞ்சை புஞ்சை எல்லாம் பெற்றவர்—பண்டார சன்னதி, கிருபை பாலித்தது விடவில்லை! 75 ரூபாய் தருமாறு அவர் உத்தரவிடவில்லை. இவருக்கு 75 ரூபாய் பாதி இரவுக்குக்கூட போதாது! ஆமாம் சாப்பிடும் சம்பாவை பற்றித்தான்—அதற்கே போதாது இத்தொகை! இருந்தும், சைவத்தின் பிம்பம், பூலோக குரு, மதக்காவலன், என்று போற்றப்படும் பண்டார சன்னதி, இத்தொகையை, தன் 'சிஷ்யகோடி' தம்பிரானுக்குக் கொடுக்க விரும்பவில்லை! பாவம், பொன்னாசை தம்பிரானை மட்டுமல்ல, இவைத் தம்பிரானையும் விடவில்லை!! வழக்கு மூன்று நீதிஸ்தலங்களுக்குத் தாவியிருக்கிறது.

முன்சீபு கோர்ட், பின் சப்—ஜட்ஜ் கோர்ட், இரண்டையும் கடந்து ஐகோர்ட் வந்து முடிந்திருக்கிறது!

ஈசுவர பக்தர்களான இரு சிகாமணிகளும், பணத்தாசையால், பல படிக்கட்டுகள் ஏறி வக்கீல்களுக்குப் பணம் கொடுத்து, 'ஒருகை பார்த்துவிடுகிறோம்' என்று, மும்முரமாக வழக்கை நடத்தியிருக்கிறார்கள்—இந்தச் சாமான்ய 'நீதிபதிகளிடம்' தாய் வழக்கை நடத்தியிருக்கிறார்கள் 'புண்ணியவான்கள்' என்று போற்றப்பட்டுவரும்—இவர்கள்!

நீதிபதிகளும், தம்பிரானுடைய கோரிக்கையைச் சரியெனச்சொல்லி, சன்னிதானம் கொடுக்கத் தவறிய 'பெர்சனல் அலவன்சு' தொகையான ரூ 512-ஐயும் கணக்குப் பார்த்துக் கொடுக்குமாறு தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

எங்கேயோ இருந்தவர்கள், எப்படியோ இந்த இடங்களுக்குத் தம்பிரானகவும், பண்டார சன்னதியாகவும், 'பட்டம்' பெற்று, விடுகிறார்கள்—சைவ மதக்காவலர்கள் என்ற சன்னத்தும், பூலோக கடவுள்கள் என்ற பொதுமக்கள் போற்றுதலும் பெற்று, போக போக்கியத்தில் வாழ்கிறார்கள்! இறைவன் திருவடி சேர வழிகாட்டும் இவ்வுலகக் கடவுள்கள் என்ற எண்ணத்தால் மக்களும், மதிமயங்கி, இவர்களுடைய அருமை பெருமைகள், ஆத்மீக சாதனை குறித்துப் பேசுகிறார்கள்—விஷயமறிந்தவர்கள்கூட இவர்களுக்கு ஒததுதிகளாக இருக்கின்றனர், சுய நலம் காரணமாக!

மண்ணாசை பொன்னாசை, வெறுத்தவர்கள் என்று கூறப்படும் இவர்களின் நிலை எப்படியிருக்கிறது என்பதற்கு, இந்தக் கோர்ட்டு விவகாரமே போதும்! காவி தரித்து, கண்மூடி ஜெபம் செய்து, காலத்தை ஆத்மசாந்தியில் கழிப்பதாகக் கூறி வரும் இவர்கள், கோர்ட்டுக்குப் போகிறார்கள், வழக்காடுகிறார்கள், 'பணம் வேண்டும்' என்று குடுமி பிடிச்சண்டை நடத்துகிறார்கள்—இவர்களின் துறவறம்—சந்தி சிரிக்கிறது; எனினும், மக்கள் இன்னும் இவர்களை 'மகா சன்னிதானங்கள்' என்றுதான் போற்றுகின்றனர், புகழ் பாடுகின்றனர், இவர்களுக்காகப் பரிந்துகொண்டு பேசுகின்றனர். இந்த வெட்கக்கேட்டை என்னவென்று சொல்வது! எங்குபோய்ச் சொல்வது!

★

## திருத்தம்

கடந்த இதழில் மறைந்த வைத்திய வள்ளல் பிறந்த ஆண்டு 1887 என்று வந்திருப்பதை 1877 என்று திருத்திக்கொள்ளவும்.

—0—

### பாங்கர் பணம் பெருத்தான்

7-ம் பக்கத் தொடர்ச்சி

மருமகப்பிள்ளையைத் தெரியும்லே, உங்களுக்கு.

ப:– யாரு?

ச:– பக்கத்தூர் தம்பி. ஜில்லா காங்கிரஸ் தலைவர். அதுதான்...

ப:– மந்திரிகிட்டே போய்ச் சொன்னுதா!

ச:– சடேர்னுசெய்யலாமா,ஊரெல்லாம் 'டாம், டாம்' ஆயுடாது! சேர்ந்துடு மாமா, 'காங்கிரசிலே'ன்னு சொல்லிச்சு...

இப்ப ஒரு வகையா, விவகாரங்கள் எல்லாம் ஒண்ணுப் பின்னாலே ஒண்ணு தீர்ந்துகிட்டு வருது! போன வாரங்கூட மந்திரிக்கு ஒரு பார்ட்டி வச்சேன் பாருங்க...

ப:– ஓஹோ! நான்கூட நினைச்சேன். ஏன், நீங்க, திடீர்னு காங்கிரசிலே சேர்ந்து இப்படி பணத்தைச் செலவழிக்கிறீங்கன்னு...... இப்ப தானே புரியுது விஷயம்!

ச:– ஆமாம்! நமக்கென்ன, ஏதோ அவன் கொடுத்தான், அதை காப்பாத்தி, நம்ப பிள்ளை குட்டிகளை சுகமா வைக்கணும் இல்லையா!

ப:– கஷ்டமெல்லாம் போறதுக்கு நீங்க செஞ்சது நல்ல முடிவுதாங்க... இப்பதான் எனக்கும் படுது!

ச:– ஆமாம் அண்ணாச்சி! நம்ப காரியத்தை நாம்பதானே கவனிச்சுக்கணும். அப்ப...

ப:– கொஞ்சம் வாங்களேன். கதர் ஸ்டோர் வரைக்கும் போவோம்...

ச:– முடிவு பண்ணிட்டீக போலே இருக்கு. வாங்க போவோம்! அங்கேயே 'மெம்பர் புக்'கும் இருக்கும் ...சேர்ந்துடலாம்.

* * *

**பணம் பெருத்தான் காங்கிரசில் சேர்ந்தார்!**

**ஏழைகளுக்காக உழைக்க முன்வந்த வள்ளல்!**

என்ற தலைப்புகளிட்டு, அவருடைய போட்டோவுடன் தினசரிப் பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன! 'தியாகி' தேசிங்கு, குதூகலமடைந்தார், ஒரு பெரிய ஆளை காங்கிரசின் பெருமை யுணர்ந்து சேர்ந்துவிட்டார் என்று! ஆனால், 'அந்த இரண்டு உள்ளங்களை'யல்லவா கேட்கவேண்டும் உண்மைப் பதிலைப் பெற!

—✱—

மனப் போர்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

அழகு ஒரு மேக உருவம்...சில சமயங்களில் வானிலே மேகங்கள் ஓடிவரும். அந்த மேகத் திட்டுகளைப் பார்ப்போம். ஒருவர் அது சிங்கம் போல இருக்கிறது என்பார். இன்னொருவர் ஒட்டகம்போல இல்லையா, பார்......என்பார், இல்லவே இல்லை, அது யானையின் உருவமாகத்தான் தோன்றுகிறது என்று மறுப்புரை வழங்குவார். இது நமது ஊர் 'காபி ஒட்டல்' மணி அய்யர் எருமைபோல இருக்கிறது ... என்று இத்தனைப் பேரையும் தாண்டிக் குதிப்பார் ஒருவர். இது இயற்கை! மழைக் காலங்களில் நாம் செய்யும் பொழுது போக்கு ஆராய்ச்சி...அது போலத் தான அழகும்!

அஞ்சலியைப் பாருடா, அவள் நிறம் தங்கம்போல ஒளிவிடுகிறது என்பான், சிகப்பு நிறத்திலே மயங்கி, தரத்தை மறந்திட்ட சங்கன்...... போடா, அவள் செங்குரங்கு என்று முடிப்பான் சோமு. நண்பா, அன்னாவைப் பாருடா, அவளது நெளி நெளியான கூந்தலும், உள்ளத்தைத் தாக்கும் கண்களும், உயிரைக் கடையும் முத்துச் சிரிப்பும்......என்று பித்தன் போலச் சொல்வான் குமரன். இருந்தாலும் அவள் கருப்புடா, அமாவாசை இருட்டுடா, அவிச்ச தீவட்டிடா...என்று கூறி விடுவான் சங்கரன்.

அதுவும் பெண்களின் அழகைப் பற்றிக் கூற வேண்டுமானால் சங்கடமான நிலைமைதான். ஆனால் ஒரு வழி உண்டு...சிறந்த முறை அது! அழகு ஒரு ரூபாய் நாணயம், அதில் பதினாறு அணுக்களின் மதிப்பு அடங்கியிருக்கிறது என்பதை மறக்காமல், முப்பத்திரண்டு இலட்சணங்கள் என்று முன்னர் எழுதிவைத்ததையும் மறக்காமல் ஆராய்ச்சியில் இறங்கினால் தோல்வி இல்லை. பட்டம் பெற்றே வெளியில் வரலாம். அது தான் ஒவ்வொரு உறுப்பின் அழகையும் கவனித்து முடிவுக்கு வருதல் என்ற சிறந்த முறை! ஒன்றின் அழகு அதிகரிப்பால் ஒருத்தி அழகி என்று பட்டம் பெறலாம். ஒன்றின் அலங்காரம் அளவிற்கு மீறி நிற்பதாலே ஒருத்தி 'எட்டேகால் இலட்சணம்' என்ற கவிதைக்கு இலக்கியமாகி விடலாம்! சர்க்கரை அதிகரிப்பால் பால் பருக முடியாமல் போவதில்லை, உப்பின் அளவு கூடுதலால் குழம்பு குப்பைமேட்டிற்குப் போவதைப் பார்க்கிறோம்...மறக்கக் கூடாத செய்தி இது!

அழகி பாக்கியம் திருச்சிக்கு வந்து சேர்ந்ததிலிருந்தே அவளுக்குப் புகழும், பேரும் பெருகிக் கொண்டே இருந்தன. ஆகவே அந்த வருகிற புது 'டாக்டர்களும்', 'லேடி டாக்டர்களும்' வந்த முதல் நாளே பாக்கியத்தின் 'தரிசனமும், தயவும்' கிடைக்க வழி செய்து கொள்வார்கள்.

## சதிகார சாதி!

'டாக்டர்' கருணாகரன் வயதானவர். நாற்பதையும் கடந்து நரை 'துவக்கு விழா' செய்யவேண்டிய பருவத்திலே உள்ளவர். அவருக்கு பாக்கியத்திடம் அளவுகடந்த அன்பு, மதிப்புங்கூட! அவர் நகரிலே எந்த நோயாளியைப் பார்க்கச் சென்றாலும் பாக்கியத்தை உடன் அழைத்துச் செல்வார். ஆயிரம் பேரைக் கொன்றவன்தான் அரை வைத்தியன் என்று கூறுவார்களே......அப்படிப் பார்த்தால் கருணாகரர் வைத்தியரே அல்லர். அவர் இதுவரை ஆயிரம் பேர்களுக்கு மேல் பிழைக்க வைத்திருப்பார். அவருக்கு இந்த 'கைராசி' என்று சொல்வார்களே, அது அதிகம் போலும்! அவர் மருத்துவம் பார்க்கச் சென்ற இடங்களில் சாவு வருவதில்லை......வந்து விடும் என்று அவரே பலமுறை எதிர்பார்த்த நேரங்களிலும், 'எமதர்மருக்கு' கருணாகரர் எதிரியாக இருந்து வருகிறார்.

'டாக்டர்களே' எதிரிக் கோட்டைகளிலே புகுந்து வேலை செய்யும் 'பாரசூட்' படையினர் என்பர் சில பகுத்தறிவு வாதிகள்! ஏனெனில் வைதீகர்கள் என்பவர்கள் யார்...... எந்தக் கொள்கைகளை உடையவர்கள்? ...... அன்றே நம் தலைவிதி எழுதப்பட்டுவிட்டது, அன்றைக்கு எழுதியதை யாராலும் அழித்து எழுத முடியாது, அவனன்றி ஓர் அணுவும் அசையாது, தெய்வம் துணை நிற்கும்......இப்படிப் பேசுபவர்கள் தலைவலி வந்துவிட்டால்கூட எம்.பி., பி.எஸ். படித்தவர்களாகத் தேடி ஓடுகிறார்கள்......நடப்பது நடந்தே தீரும், மனிதன் மாற்றிவிட முடியுமா...என்று சும்மா இருப்பதில்லை. ஏனய்யா, இப்படி ஓடுகிறீர்கள் என்றால் ஆமாம், திருப்பதிக்குவேண்டிக் கிட்டு கையிலே மஞ்சத் துணியும் கட்டிதான் வைத்திருக்கிறேன், இருந்தாலும் நாம செய்யவேண்டியதைச் செய்ய வேண்டாமா...... என்று மென்று விழுங்குவர் வார்த்தைகளை! 'டாக்டர்கள்'தான் ஆத்திக அன்பர்களையும் நாத்திக நண்பர்களாக்கும் அருமையான தொழிலைக் கற்றிருக்கிறார்கள்! 'டாக்டர்' கருணாகரன் ஏற்கனவே இந்த 'புதுப்பாடை' படித்தவர். அதுவும் அது பழுத்து நிற்கும் அனுபவ முத்திரை அவருக்கு. ஆகவே இந்தச் சீர்திருத்த கொள்கைகள் அவருக்குத் தித்திக்கும்......வைடமின் மாத்திரைகள்!

பாக்கியத்திடம் அவருக்கு அதிக அன்பு வளர்ந்ததற்குக் காரணம் அவளது திறமையும், குணமும் மட்டுமல்ல, வேறு ஒரு காரணமும் உண்டு. பாக்கியம் சமூக வெறியர்களின் முழு பழிக்கும் ஆளான பிரிவு—ஆதித் திராவிட வகுப்பு—'அரிஜன்' சாதி என்று அவருக்குத் தெரியும்! தாழ்த்தப்பட்ட வகுப்பிலே பிறந்து இந்த தகுதியை அடைந்த அந்த பாவையிடம் பரிதாபம் கொஞ்சம்...அது நாளடைவில் பாசமாக மலர்ந்து இருந்தது.

(தொடரும்)

## அறிவிப்பு

கொழும்பில் "திராவிடநாடு" விற்பனையாளர்கள்:—

மோகன் & கம்பெனி
தபால் பெட்டி நெ. 964
கொழும்பு.

★

ஈரோட்டில் "திராவிடநாடு" விற்பனையாளர்:—

இரா. பெருமாள்
வளையக்காரத் தெரு
ஈரோடு.

## இந்தோ சீனா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சில வியட்நாமியரை கொண்ட பொம்மை சர்க்காரை ஏற்படுத்தினர் ஆனால் இந்தச் சர்க்கார் பிரஞ்சுக்காரர்கள் எதிர்பார்த்தளவு மக்களிடம் செல்வாக்குப் பெறமுடியவில்லை. மக்களை ஏமாற்ற என்ன செய்வது? வியட்நாமியரிடம் மன மாற்றத்தை எப்படி ஏற்படுத்துவது? உள் நாட்டில் மக்களில் ஒரு சிலருடைய ஒத்துழைப்பாவது கிடைத்தால்தானே ஹோசிமின்னை ஒழிக்க முடியும்!

இதைத்தான் பாரிஸில் உட்கார்ந்து கொண்டு பிரஞ்சு அதிகாரிகள் யோசித்தனர். கடைசியாக அவர்கள் கண்ட வழி படிதான்: அன்னம் பிரதேசத்தின் முன்னாள் மன்னன பாவோடாய் வியட்நாம் முழுமைக்கும் தலைமையதிகாரியாக நியமிக்கப்பட்டான்! அறியாமையில் மூழ்கியிருக்கும் தென் கொச்சின் சைனா மக்கள் பாவோடாயின் அரச பரம்பரைக்காகவாவது மரியாதை செலுத்துவர் என்று எதிர்பார்க்கிறது பிரஞ்சு அரசாங்கம், ஓரே வாரத்தில் நூற்றுக்கணக்கான அரச குடும்பத்தாரைத் தூக்கிலேற்றிய பிரஞ்சு அரசாங்கம் பாவோடாயை வியட்நாம் தலைவராக அனுப்பியது கைப்புக் கிடமானதுதான்!

பாவ்டாயிடம் 1949 டிசம்பர் 0-ம் தேதி அதிகாரம் மாற்றப்பட்டது. அதாவது பாவோடாய் அரசாங்கம் பிரஞ்சு அரசாங்கத்தின் கீழிருக்கும் 'சுதந்திரமான' சர்க்கார்! தற்குத் துருப்புக்களின் மீது ஆதிக்கம் கிடையாது. வெளிநாட்டு கா பிரஞ்சு மேற்பார்வையிலிருக்கும். இப்படி தன் ஆதிக்கத்திற்கு ஆதரவாக வியட்நாமில் ஒரு 'குவிஸ்லிங்' அரசாங்கத்தை நிறுவியது ரான்ஸ்.

இந்த நிலையில்தான் வெளிப்படை உலக அரங்கில் வியட்நாம் சனை தோன்றியது. இதுவரை ரான்ஸின் சொந்த விஷயமாக ருந்த 'வியட்நாம் சுதந்தரம்' இப்பொழுது சர்வதேசியரீதியில் முடிவு ய்யப் படவேண்டியதாகிவிட்டது!

வியட்நாமில் இரண்டு அரசாங் டாக்டர் ஹோசிமின்; பாவ் ய். இதில் யாரைத் தேசத்தின் தலைவரென்று உலக அரசாங்கங்கள் ஒத்துக் கொள்வது? இதில் எந்த அரசாங்கத்தையும் அங்கீகாரம் செய்வது வெறும் மனித நியாயத்தைப் பொறுத்தது மாத்திரமல்ல. வல்லரசுகளுள் ஏற்பட்டிருக்கும் கருத்து வேறுபாடுகள், ஆதிக்கப் போட்டிகள் எல்லாம் இதில் பின்னப்படுகிறது.

இன்றைக்கும் ஐரோப்பாவில் வல்லரசுகள் செய்யும் முடிவைப் பொறுத்துதான் உலகம் பூராவும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்கும் தங்கள் சொந்த வியாபார நோக்கத்தோடுகூட, ஐரோப்பிய போராட்டத்தில் ரஷ்யாவுக்கு சமமாகப் போரிட ஆசியாவில் ஆதிக்கமும் தேவைப்படுகிறது. சைனாவும் சிவப்பாகமாறிய பிறகு மீதியுள்ள நாடுகளைப்பற்றி அவர்கள் மிகுந்த கவலைபட்டு கொள்ள வேண்டியவர்களாகிறார்கள்.

இதே நோக்கில், உலக முழுவதும் மக்களின் ராஜ்யம் என்று முழங்கிக்கொண்டு பவனி வரும் சோவியத் யூனியன், சுதந்திரத்திற்காகப் போரிடும் ஹோசிமின்னை ஆதரிக்காமலிருக்க முடியாது.

ஆனால் அதே நேரத்தில் அமெரிக்க, பிரிட்டிஷ் வல்லரசுகளுக்கு ஹோசிமின் நேரடியான எதிரி. வளர்ந்து வரும் கம்யூனிசம் எங்காவது ஓரிடத்தில் நிறுத்தப்படவேண்டும். சைனாவில் சியாங் சர்க்கார் தோல்வியடைந்த பிறகு இதன் அவசியம் இன்னும் அதிகமாகிவிட்டது. ஆகவேதான் ரஷ்யா வெளிப்படையாக ஹோவின் அரசை அங்கீகாரம் செய்தபிறகு பாவோடாய் சர்க்காரை அங்கீகரித்திருக்கின்றனர், அமெரிக்கரும் பிரிட்டிஷாரும் ஆசியாவில் அவர்கள் எதிர்பார்க்கும் பலனைவிட ஐரோப்பாவில் பிரான்ஸின் முழு உதவியைப் பெற இந்த 'அங்கீகார நாடகம்' நடத்தப்பட்டிருக்கலாம். பிரான்ஸின் ஒருமுகமான ஒத்துழைப்பு அமெரிக்காவிற்கு ஐரோப்பிய பிரச்னைகளில் நல்ல பலனை அளிக்கும்.

ஐக்ய நாட்டுச் சபையின் பெரிய தலைகள் ஐந்து:- அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ். சீனாவும் கம்யூனிஸ்டானவுடன் எந்த பிரச்னையிலும் ரஷ்யாவும் சீனாவும் ஒருபக்கமும் அமெரிக்காவும் பிரிட்டனும் ஒரு பக்கமும் நிற்கும் அந்த நேரங்களில் பிரான்ஸின் மதிப்பு அதிகம். ஆகவேதான் அமெரிக்காவும் பிரிட்டனும் அவசரம் அவசரமாக பாவ்டாய் சர்க்காரை அங்கீகரித்திருக்கிறது என்று சொன்னால் பிழையாகாது.

இன்றையதினம் உலக வல்லரசுகள் நேர்எதிரான போர் முகாம்களில் நிற்கின்றன. ஹோவைக் காப்பாற்ற ரஷ்ய போர்த் தளவாடங்களும் பாவ்டாயை ஆதரித்து அமெரிக்க சைன்யங்களும் வியட்நாமில் வந்திறங்கும். வியட்நாமின் உள்நாட்டுப் போர் புதிய உருவம் எடுத்தாலும் எடுக்கலாம். ஒரு சமயம் அடுத்த உலகப் போருக்கு இந்தோசீனாவே முக்கிய காரணமாக மாறினாலும் மாறலாம்!

இந்தச் சூழ்நிலையில் நேரு சர்க்கார் என்ன செய்யப் போகிறது? காமன்வெல்த்தாக இருப்பதால் பிரிட்டன் வழியை பின்பற்றப்போகிறதா? அல்லது ஆசிய மக்களின் விடுதலை இயக்கங்களோடு சேரப் போகிறதா?

கிட்டத்தட்ட நம்மைப் போலவே நைந்து போன வாழ்க்கையிலிருந்து விடுபட்டு வெள்ளைப் பரங்கியை வெளியேற்றும் கைங்கர்யத்தில் ஈடுபட்டுள்ள ஹோவை ஆதரித்தால் தான், முன்னாளில் பிரிட்டிஷ் சிறைக் கம்பிகளை எண்ணியதற்கு ஏதாவது அர்த்தமுண்டு. நமக்கு அதிகாரம் கிடைக்கும்வரை ஆக்கிரமிப்பாளர்களாகத் தோன்றிய ஐரோப்பிய வல்லரசுகள், இன்று வியட்நாமில் மக்களாட்சியைப் பூக்கச் செய்கின்றனர் என்று கூறினால் அது கபடமொழியே தவிர வேறல்ல.

ஹோசிமின்னுடைய போராட்டம் ஆசிய மக்களின் விடுதலைப் போராட்டம். உலக மக்களின் உரிமைப் போரில் ஒரு பகுதி இந்தோனேஷியா, பர்மா, மலேயா முதலிய நாடுகளில் நடக்கும் போராட்டங்களின் தொடர் அத்தியாயம். வியட்நாமின் முடிவு அடிமை நாடுகள் அவ்வளவுக்கும் ஏற்படும் முடிவு. வல்லரசுகளின் ஆதிக்க வெறியும் அங்கேதான் தகர்க்கப்படும்—தகர்க்கப்பட வேண்டும்!

*

# மனப்போர்

**தில்லை வில்லாளன்**

## நர்ஸ் பாக்கியம்

அவள் அன்று அந்த கடிதத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். அவள் எதிர்பார்க்காத நேரத்தில் எதிர்பாராத மூலையிலிருந்து அந்த காகிதம் வந்திருந்தது. பாதை வழியே செல்லும்பொழுது பத்து 'பவுன் செயின்' ஒன்று கிடந்தால்கூட அவளுக்கு அந்த ஆனந்தம் வந்திருக்காது......அந்த முக்காலணா அஞ்சலட்டை என்ன வேலை செய்து விட்டது! அவள் கண்களிலே குறுகுறுப்பை இழுத்து வந்து விட்டது. அவள் கன்னங்களில் ஒரு சுகசுகப் புணர்ச்சியை பூசி விட்டது. அவளது உதடுகளில் அவளையுமறியாமல் சின்னஞ்சிறு குழந்தைச் சிரிப்பு! அவளது இதய அடிவானத்தில் இன்பத்தின் செந்நிறப் படையெடுப்பு முழுக்க முழுக்க வெற்றியடைந்து விட்டது! அவள் கனா வெளியிலே நடப்பது போல நடந்து கொண்டிருந்தாள். அவள் கால்கள் 'தத்தக்கிளித்தனம்' பண்ணி அவளது உள்ளம் என்ற எழுத்தாளன் எழுதி முடித்த களிப்புக் கூத்து என்ற புத்தகத்திற்கு 'முகவுரை' எழுதின. எந்த வேலையும் செய்ய விடாமல் அவள் மனம் கனவுத் திட்டங்களிட்டவண்ணமே இருந்தது.

கடிதங்கள் படிப்பது என்பதே ஒரு கலை—விரித்து விளக்கிட முடியாதபடி மிகப் பெரியதாக வளர்ந்து நிற்கும் இலக்கிய வேலை! சிலர் விழித்து எழுந்தவுடனேயே அந்த சாகாரன் 'திவ்ய தரிசனம் தாலா காதா' என்று ஏங்கிக்கொண்டிருப்பர். அவனது 'வரப்பிரசாதம்' கிடைக்காத நாளெல்லாம் சித்தங் கலங்கிய பித்தனைப்போல் இருப்பர்.

ஆனால், அவளுக்கு அந்தக் கடிதம் வீட்டிலே கிடந்தது என்று வேலைக்காரி எடுத்துக் கொடுத்தது தான்......! அவள் காலையிலே மருத்துவமனைக்குச் சென்று மாலையிலே தான் திரும்பமுடியும். அப்பொழுது

> 'மனப்போர்' கற்பனையல்ல, எண்ணங்களின் விண்ணப்பம்...... இதயத் துடிப்பு......எதிர் ஒலி!
>
> காதல்காமம். பாவம் என்ற படையும் புண்ணியம் என்ற பட்டாளமும் மோதுகின்றன முடிவே இல்லாமல்!
>
> கொலை, களவு, பொய், காமம்... பாவப் பட்டியல் நீளுகிறது. ஆனால் சலனம் செய்யத் தூண்டுகிறது அதே பாவங்களை...! ஏன்...! என்ற கேள்விக் குறிதான் இத் தொடர் சித்திரம்!

அவளது வீட்டைப் பூட்டியேதான் போட்டிருப்பாள் வேலைக்காரி தங்கம்......அவள் சக்கரக்காரி— எங்காவது வாயடிக்கப் போய்விடுவாள்! அஞ்சல்காரன் கதவிடுக்கு வழியாகப் போட்டிருக்கிறான். அவள் திறந்த பொழுது கவனிக்கவில்லை. மாலையிலே வரும்பொழுது அவள் வாடிப்போன மல்லிகை சரமாகத் தான் வருவாள். காலையிலே இளம் புதுப் பொழுது அன்று அலர்ந்த மணப்பரப்பும் புதுரோஜாவாகத் தான் தோன்றுவாள். மாலையிலே அவள் முகத்திலே எதிர்த்திருக்கும் களைப்பு அவளது கண்களுக்குத் திரை கட்டி வேடிக்கை செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் கிருட்டின வேணி 'மார்க்' நிலைமையினால், முப்பத்தேழு ரூபாய் 'பார்க்கர்' பேனாவின் துணைகொண்டு நினைத்து நினைத்து நிறுத்தி நிறுத்தி முத்து முத்தாக எழுதியிருந்த அந்த அஞ்சலட்டைக் கண்களில் படாமல் இருக்குமா...தமயந்தியிடம் தூது சென்ற நளன் கற்றுக்கொண்ட மறைவு மந்திரமா இரவல் வாங்கி வந்துவிட்டது! இல்லை...ஆனால் நளனும், தமயந்தியும் நாயகன் நாயகியாக உள்ள நளவெண்பாவிலிருந்து கொஞ்சம் 'காப்பி'யடித்து விட்டது என்பது மட்டும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மை! அன்று நளனுக்கும் தமயந்திக்கும் நடுவில் தூது சென்று வந்த பெருமை உயிருள்ள அன்னத்தைச் சேரும். இந்த அஞ்சல் முத்திரையட்டை அந்த அன்னத்தின் அருந்தொண்டைதானே மேற்கொண்டு வந்து விட்டது! 'தூது நீ சொல்லி வாராய்' என்று பாடிய ஒரு வாலிபனுக்கு பரிந்து கொண்டு பறந்து வந்து விட்டது!

அந்தக் கடிதத்தை ஒரு முறை பார்த்தாள்...மீண்டும் படித்தாள்... இப்படி பல முறை படித்துவிட்டாள்! இதை 'ஜாடைமாடை'யாகக் கவனித்த வேலைக்கார தங்கம்மாவுக்கு சிரிப்பு ஒரு புறம், சிந்தனை மற்றொருபுறம்...அவள் ஏதோவேலை செய்வதுபோல நடித்துக்கொண்டே தனது தலைவியைக் கவனித்தாள். அவள் மீண்டும் மீண்டும அந்த நான்கு வரிக்கடிதத்தைப் படி

...தைப்பார்த்து சிரித்தாள் இலே சாக...பிறகு பலமாக...கடைசியில் உரக்க உரக்க! அப்பொழுது நான் ...ன்லே தங்கம்மா கவனித்திருக்கி...ள் என்ற உண்மை புலப்பட்டது. ...வள் முகவானத்தில் நாணவெண் மேகங்களும், அச்ச கருமேகங்களும் கலந்து பரவின!

அந்தக் கடிதத்தில் அப்படி என்னதான் எழுதியிருந்தது...யார் எழுதியிருந்தார்கள்? அவளை அப்படி ஆட்டி வைக்கக் காரணந்தான் என்ன?

பாக்கியம்......என்றால் இப்பொழுது திருச்சியிலே உள்ள பெரியமனிதர்களுக்கு, அதே நேரத்தில் 'ஏழை எளியவர்களுக்கு' நன்றாகத் தெரியும். ஆம் சாதாரண பாக்கியமல்ல, பலர் வாழ்விலே பாக்கியத்தைப் பாய்ச்சவந்த 'நர்ஸ்' பாக்கியம்! மருத்துவமாது......வைத்திய வனிதா...சிகிச்சை செய்ய வந்த சிங்காரி...பிரசவ வேதனை போக்கும் வந்த பிராட்டி...பிணிபோக்க பணியாற்றும பெண்ணணங்கு! மாத்திரை மாத்திரைன்னு ஊசைை ஏமாத்திரே ...என்னடி பிழைத்திரே......ஆமாம், அவன் போய்ட்டான் வைகுண்ட யாத்திரை......என்று ... ல் பேச வேண்டிய வைத்திய 'வல்லல்' பரம்பரையில் அவள் சேர்க்கப்படவேண்டியவள் அல்லவே, அல்ல! அவள் ...தவித்து வந்து விட்டாளென்றால் அந்தப் பிணியாளனும்தான் பிழைத்து எழுந்து விட்டதாகக்கூட எண்ணி விடுவான். அவள் பிணியாளர்களிடம் உதிர்க்கும் கனிமொழிகள், கற்கண்டுச் சொற்கள், சர்க்கரை வார்த்தைகள், தேன் ...த்துக் கோவைகள்.........'டாக்டர்' மருந்தைவிட, உடலிலே ஏற்றும் ஊசிச் சிகிச்சையைவிட வெற்றி தரும் மூலிகைகள்! அவளது குளிர்ந்த பார்வையினால் குணம் பெற்றோர் கோடானுகோடி...அவளது இன்ப நோக்கால் வலியை மறந்து சிரித்துச் சிரித்து பிணியொழித்தவர் எவ்வளவோ பேர்... ...ன்புத்தடவலில், தாய்மைத் தொடுகையில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பொன் மொழியைப் படித்துக் கொண்டவர் எண்ணிலடங்கார்! பாக்கியம் வந்துவிட்டால் ...ங்கள் முன்சென்ம தவத்தினால் ...ளைந்த பாக்கியம் என்றே கருதுவர்!

தூய வெண்மை நிற ஆடையில் அவள் தோன்றும் போது புராணக்காரராக இருந்தால் 'வெள்ளைக் கலையுடுத்தி, வெண்தாமரை பூவிலிருப்பாள்...'என்று பாடவே ஆரம்பித்து விடுவர்.

அவள் நல்ல கருப்பு......ஆனால் அந்த நிறத்தினால்தான் அவள் அழகு அதிகமாகிறது எனலாம். கருப்பு நிறத்திலும், 'களை' யுள்ள முகம், மானையும் மயக்கும் மருண்ட பார்வையை அடிக்கடி வீசும் கண்கள், ஒளியுள்ள நெற்றி, முத்துத் தடாகத்தின் முதற்படிகளான கன்னங்கள்........சேர்ந்து விட்டதால அவள் அழகு 'தேவதை' கொள்ளை அழகு,........அங்கே திரண்டு உருண்டு வந்து விட்டது என்று கூறுவர் அவளைப் பார்த்து மயங்கி நின்ற சில வாலிபர்கள்! சுருங்கச் சொன்னால் அவள் அழகானவள் அல்ல என்றுமட்டும் யாராலும் கூற முடியாது!

அழகு இலக்கணமில்லாத இலக்கியம்! இலக்கியங்கண்டு இலக்கணம் வரைய வேண்டிய நிலைமை......இது அனுபவ உண்மை! ஆங்கில மொழிதான் அழகு! என்? ஆங்கில மொழிக்கு அறுதியிட்டு உறுதியாகக் கட்டுப்பாடு வரையறுக்கப்பட்ட இலக்கண நூல் இல்லை. இப்பொழுது இருப்பதாகக் காட்டினாலும் ஒவ்வொரு விதிக்கும் ஓராயிரம் விதிவிலக்குகள்......இப்படி விதியிருந்தாலும் பழக்கத்தில் இப்படி இருக்கிறது என்ற இழுப்பு மழுப்பல்கள்! அப்படித்தான் அழகுக்கு இலக்கணம் இல்லை.

அழகுக்கு பொருளெழுதாத... எழுத முடியாத 'டிக்ஷனரி'தான் உண்டு! அழகு என்று எழுதிப்பொருளெழுத வேண்டிய இடத்தில் அவரவர் விருப்பம்போல எழுதிக் கொள்க......என்ற குறிப்புமட்டும் எழுதியிருக்கவேண்டும அந்தப் புரியாத பதங்களுக்கு பொருள் கூறி புரியவைக்கும் புத்தகத்தில!

திருமாலுக்கு 'அஷ்டோத்ர திருநாமம்' என்று பாடுவர்...மாதவா, கேசவா, கோவிந்தா, கோபாலா, ஆதிமூலமே, ஆபத்பாந்தவா, அனாத ரட்சகா, அச்சுதா......அப்படி, இப்படியென்று நூற்று எட்டுப்பெயர்களையும் கொட்டியளப்பர்! அது போலவே அழகு எதுவென்று ஆளுக்கொரு 'அஷ்டோத்ர நாம தோத்திரம்! பாடலாம்...இல்லையா?

இவள் அழகி...இவள் அகோரம் என்று கூறும் திடீர் முடிவுக்காரர்கள் எப்பொழுதும் ஏமாந்துவிடுவார்கள்! அவர்கள் நீதிபதிகளாக இருக்கவே முடியாதவர்கள்......கூடாதவர்கள்! இவள் கூந்தலழகி, இவள் பல்லழகி, இவள் நிறத்தால் வனப்புடையவள், இவள் நடையால் சிறப்புற்றாள்...... என்று கூறுபவர் நடுநிலை வகித்து நல்ல தீர்ப்பு தரத் தகுதியுடையவர்கள். அழகு ஒரு அழகான வர்ணச் சிலை......அதில் அமைப்பு சரியாக இருக்கலாம், வர்ணச் சேர்க்கை சரியில்லாமலிருக்கலாம்! ஆகவே சிலை சிறப்பிழந்தது என்று சொல்லி விடக்கூடாது! வர்ணச் சேர்க்கை வேறாக இருந்தால்......என்றும் கூற வேண்டும்

அழகு தனிப்பட்ட மனிதப் பிறவிகளுக்குரிய பொது சொத்தல்ல ......அது உலகத்துப் பொருள்கள் அத்தனைக்கும் உரிய ஒரு பிறப்புரிமை! உயிருள்ள பொருள்களுக்கு மட்டுமல்ல, உயிரற்ற கற்களிடத்துக் கூட அது இருக்கும்! அழகு ஒரு பொதுவுடைமை வாதி......எல்லா இடத்திலும் இருக்கும்! மனிதனிடம் உள்ள இயற்கை சாதிகளாகிய ஆண், பெண் என்ற இரு கூட்டத்தில பெண்களிடம் மட்டுமே இது அடைக்கலம் புகுந்துவிட்டதாகக் கூறுகிறார்கள் ...... நினைக்கிறார்கள் ......இது தவறு, திருத்திக்கொள்ள வேண்டியது! மானைப் பார்க்கிறோம். அழகு என்று வாழ்த்துகிறோம். மயிலைப் பார்க்கிறோம். அழகாக இருக்கிறது என்று கூத்தாடுகிறோம். மாங்கனியைப்பார்க்கிறோம். மகிழ்ச்சி கொள்கிறோம். தென்றலிலே இன்புறுகிறோம். கடலலையைக் கண்டும், நீல வானைப் பார்த்தும், ஓடும் அருவியினை நோக்கியும்,......அகங் குளிர்கிறோம். ஏன்? சிலவற்றை இவை இப்படியிருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறோம். அது 'இடுகுறி' எண்ணமோ, காரணத்தோடு கூடியதோ நாம் அறியோம். அந்தப் பொருள் அப்படி அமைந்துவிட்டால் அழகு என்று தீர்ப்பளிக்கிறோம்.

அழகு ஒரு இன்பக் கனவு...... அது ஆளுக்கொரு விதமாக அமைகிறது!

(12-ம் பக்கம் பார்க்க)




Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.